# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

MITRA TIMES - Tamil & English Monthly

மலர்: VII இதழ்: 6 | நவம்பர் 2021 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/-

Vol.: VII Issue: 6 | November 2021 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20




இந்திய இறையாண்மைக்கு ஊறுவிளைவிப்பதா?

- துடுப்பதி ரகுநாதன்

கோகிலா இல்ல கோகிலம்

- சிறுகதை

சின்னத்திரையில் எனது வெற்றிப் பயணம்

-''கயல்''இயக்குனர் செல்வம் சொல்கிறார்!

தடங்கலும் தடைக்கல்லும்!

- ஆசிரியர் கடிதம்

## நகைக் கடன் தள்ளுபடியும் நடைமுறைச் சிக்கலும்!

-விளக்கம் தருகிறார் தமிழ்நாடு கூட்டுறவு சங்க சம்மேளனப் பொதுச்செயலாளர் திரு.E.சர்வேசன்

# First prime minister of independence india Jawaharlal Nehru birthday

# CHILDRENS DAY



Jawaharlal Nehru was born in Allahabad, the son of a lawyer whose family was originally from Kashmir. He was educated in England, at Harrow School, and then at Trinity College, Cambridge. He studied law at the Inner Temple in London. He returned to India in 1912 and practised law for some years. In 1916, he married Kamala Kaul and the following year they had a daughter, Indira.

In 1919, Nehru joined the Indian National Congress which was fighting for greater autonomy from the British. He was heavily influenced by the organisation's leader Mohandas Gandhi. During the 1920s and 1930s Nehru was repeatedly imprisoned by the British for civil disobedience. In 1928, he was elected president of the Congress.

By the end of World War Two, Nehru was recognised as Gandhi's successor. He played a central role in the negotiations over Indian independence. He opposed the Muslim League's insistence on the division of India on the basis of religion. Louis Mountbatten, the last British viceroy, advocated the division as the fastest and most workable solution and Nehru reluctantly agreed.

On 15 August 1947, Nehru became the first prime minister of independent India. He held the post until his death in 1964. He implemented moderate socialist economic reforms and committed India to a policy of industrialisation.

Nehru also served as foreign minister of India. In October 1947, he faced conflict with Pakistan over the state of Kashmir, which was disputed at independence. Nehru sent troops into the state to support India's claim. A United Nations ceasefire was negotiated, but Kashmir remains deeply unstable to this day.

Against the background of the Cold War, Nehru developed a policy of 'positive neutrality' for India. He became one of the key spokesmen for the non-aligned countries of Africa and Asia, many of which were former colonies that wanted to avoid dependence on any major power.

Despite efforts at cooperation by both countries, Indian-Chinese border disputes escalated into war in 1962 and Indian forces were decisively beaten. This had a significant impact on Nehru's declining health. He died on 27 May 1964.

Two years later Nehru's daughter, Indira Gandhi, became prime minister. With an interruption of only three years, she held the post until her assassination in 1984. Her son Rajiv was prime minister of India from 1984 to 1989, but he too was assassinated.

Nehru's four pillars of domestic policies were democracy, socialism, unity, and secularism, and he largely succeeded in maintaining a strong foundation of all four during his tenure as president. While serving his country, he enjoyed iconic status and was widely admired internationally for his idealism and statesmanship. His birthday, November 14, is celebrated in India as Baal Divas ("Children's Day") in recognition of his lifelong passion and work on behalf of children and young people.



**Concept by:**
**S.SHRUTHI LAKSHMI**
B.Sc., (psychology)

# தடங்கலும் தடைக்கல்லும்!

அன்புடையீர் வணக்கம்.வெற்றி பெற்ற மனிதர்கள் எளிதில் வெற்றி பெறவில்லை. அந்த வெற்றியை பெறுவதற்கு முன்பு, அவர்களுக்கு முன்பாக தடைகளும் தடங்கல்களும் இருந்தது.அதையெல்லாம் உடைத்து தகர்த்து வெற்றிச் சரித்திரம் படைத்தவர்கள் பலரை நாம் அறிந்திருக்கிறோம்.

கவியரசர் கண்ணதாசன் தான் கடந்து வந்த பாதையில் தான் ஆரம்பத்தில் சந்தித்த சவால்களை ,சங்கடங்களை பல புத்தகங்களில் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் கவியரசர் கண்ணதாசன் பற்றி அவரது அருமை மகன் காந்தி கண்ணதாசன் ஒரு செய்தி சொன்னார். செட்டி நாட்டிலிருந்து சினிமாக் கனவுகளுடன் பதினாலு வயதுப் பையனாகச் சென்னை வந்தார் கவிஞர். அன்று இரவு படுக்க இடமின்றி மெரினா பீச்சில் காந்தி சிலைக்குப் பின்னால் பெட்டியைத் தலைக்கு வைத்துப் படுத்திருக்கிறார் கவிஞர்.

நள்ளிரவு. போலீஸ்காரரின் உருட்டுத்தடி அவரைத் தட்டி மிரட்டியது. காலையில் நகரத்தார் விடுதிக்குப் போக வேண்டும். இரவு மண்ணடி வரை போக முடியாது. அதனால் பீச்சில் படுத்துக் கொள்ள அனுமதி கேட்ட அந்தப் பதினாலு வயதுப் பையனின் கோரிக்கையைப் போலீஸ் நிராகரித்தது. “”படு... படுக்கணும்னா நாலணா குடு” என்று காவல் மிரட்டியது. நாலணாவுக்கு வழியின்றிக் கலங்கிய கண்களுடன் காந்தி சிலையில் இருந்து நடந்திருந்திருக்கிறார் கண்ணதாசன்.

அவர் வளர்ந்து கவியரசாகி “சுமைதாங்கி’ என்ற சொந்தப் படம் எடுக்கிறார். கதாநாயகனாக நடித்த ஜெமினி கணேசனை எங்கிருந்து நடக்க விடுவது என்று யோசித்த கவிஞர் அதே காந்தி சிலையைத் தேர்ந்தெடுத்தார்.

நள்ளிரவு ஷூட்டிங். ஆனால் படத்தில் இரவு 7 மணி மாதிரி இருக்க பீச் ரோட்டில் நிறைய கார்கள் வரிசையாக வரவேண்டும். ஏழு கார்களை நிற்கவைத்து மாறிமாறி ஒன்றன்பின் ஒன்றாக வருகிற மாதிரி படம் எடுக்கிறார்கள். வீட்டில் இந்தப் படத்தைப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்த கவிஞர், பிள்ளைகளைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார். “”இந்தக் கார்களை கவனித்தீர்களா? இவை எல்லாமே நம்முடைய கார்கள். வாழ முடியும் என்ற நம்பிக்கையோடு சென்னை வந்த என்னை இந்த இடத்தில்தான் நாலணா இல்லை என்று போலீஸ் நடக்கவிட்டது... இதே இடத்தில் இன்று என் ஏழு கார்களை ஓடவிட்டுப் படம் எடுத்திருக்கிறேன். நம்பிக்கை என்னை ஜெயிக்க வைத்துவிட்டது” என்றாராம்.



எனவே வெற்றி பெற வேண்டுமென்றால் எந்த தடையையும் தாண்டி செல்ல தயாராக இருக்க வேண்டும் அதே போல ஒரு காரியத்தில் இறங்கும்போது அந்த செயலை செய்து முடிக்க புத்திக்கூர்மையும் அவசியம்.

ஆற்றங்கரை ஓரமாக வந்துகொண்டிருந்த வழிப்போக்கன் ஒருவனுக்கு வைரக்கல் ஒன்று கண்ணில் பட்டது..

அது வைரம் என்றறியாமல், விலை போகுமா என்ற சந்தேகத்துடன் கடைத்தெருவுக்கு எடுத்து வந்தான்..

அவன் கையில் வைரம் இருப்பதைப் பார்த்த வியாபாரி ஒருவன், இருபது ரூபாய்க்கு தன்னிடம் அதை விற்குமாறு கேட்டான்..

ஆனால் வழிபோக்கனோ பேரம் பேசித்தான் பார்ப்போமே என்ற எண்ணத்துடன் 25 ரூபாய் கேட்டான்..

ஐந்து ரூபாய் அதிகம் கொடுக்க விரும்பாத அந்த வியாபாரியும் 20 ரூபாய்க்கு பேரம் பேசினான்..

இதைக் கவனித்த மற்றொரு வியாபாரி 25 ரூபாய் கொடுத்து அந்த வைரத்தை வாங்கிக்கொண்டு சென்றான்..

ஆத்திரமடைந்த வியாபாரி, அந்த வழிப்போக்கனை பார்த்து, “அட முட்டாளே! அதன் மதிப்பு பல ஆயிரம் பெறும்... அறிவில்லாமல் விற்றுவிட்டாயே!” என்று திட்டினான்..

அதற்கு அவன், “அந்தக் கல்லுக்கு என்னுடைய மதிப்பு அவ்வளவுதான்.. ஆனால் அது வைரம், அதன் மதிப்பு தெரிந்தும் அதைத் தவறவிட்ட நீ தான் மிகப்பெரிய முட்டாள்” என்றான்..

சிலர் இப்படித்தான் உண்மையான மதிப்பு தெரிந்தும், கிடைத்ததை விட்டுவிட்டுத் தவிக்கிறார்கள்.

எனவே மதிப்புக்குரியவற்றை மதித்துப் பாதுகாப்போம். மற்றவர்களை மதிப்போம். மற்றவர்கள் மதிக்க நடப்போம்.

– எம்.எஸ்.மூர்த்தி

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 07 நவம்பர் 2021 டைம்ஸ்- 6

அச்சிட்டு வெளியிடுபவர் & ஆசிரியர்

**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்

திருமதி. **சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்

மணவூர் **கி.விடாரண்யம்** பி.ஏ.,பி.ஜி.எல்.,
9789837069, 9962177865

**சிறப்பு ஆலோசகர்**

**கலைமாமணி டாக்டர் நடிகர் பூவிலங்கு மோகன்**

**நிர்வாக ஆசிரியர்**

**ஆர்.குணசேகரன்**

**செய்தியாளர்கள்**

**ஆர்.அரிபாபு, ஆர்.முரளி,**
**பி.வினோத்**

செய்தி இணை ஆசிரியர்கள்

கவிஞர் **சுகந்தீனா**

**துடுப்பதி ரகுநாதன்**

இணையதள செய்தியாளர்

**எஸ்.சுருதிலட்சுமி** பி.எஸ்சி.,

சட்ட ஆலோசகர்

**வி.என்.பிரசாத்** எம்.ஏ.,பி.எல்.,

வடிவமைப்பு

**vidapublications@gmail.com**

விளம்பரம், சந்தா தொடர்புக்கு

**சி.இளவரசி**

044-23743007 / 8

**அலுவலகம்:**

**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,**
**9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.**
**தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**

**82485 85067**
mitratimes2015@gmail.com
www.mitratimes.com


# உள்ளே...




**இந்திய இறையாண்மைக்கு ஊறுவிளைவிப்பதா?**
**- துடுப்பதி ரகுநாதன்** 6



நகைக் கடன் தள்ளுபடியும் நடைமுறைச் சிக்கலும்! 8



கன்னட நடிகர் மரணமும் கவலை தரும் செய்திகளும்! 20



அன்பான "அத்தை நடத்தை" அரவணைக்கும் விலங்குலகம். 36



ஜாமீன் பற்றி அறிவோமா? 38



இதயத்தை நேசிப்போம்! 50

# செயற்கைக்கோள் வடிவமைத்த விஞ்ஞானி வளர்மதி!

உன்னால் முடியும் பெண்ணே!





தமிழகத்தில் பின்தங்கிய அரியலூர் மாவட்டத்தில் 1959ஆம் ஆண்டு பிறந்தார் வளர்மதி. அப்பா நடராஜன்,பொறியியலில் பட்டம் பெற்று

1984ஆம் ஆண்டு இஸ்ரோவில் அவர் பணிக்கு சேர்ந்தார். கார்கில் போரின்போது, 2001 வாக்கில் உடனடியாக ஒரு செயற்கைக்கோள் இந்திய ராணுவத்திற்குத் தேவைப்பட்டது. மிகக் குறுகிய கால நேரத்தில்தான் இந்தத் திட்டம் இஸ்ரோவுக்கு வழங்கப்பட்டது.

அந்தத் திட்டத்தில் விண்கலத்தின் ஒருங்கிணைப்பு, பரிசோதனை மற்றும் அதனை விண்வெளிக்கு அனுப்பும் குழுவிற்கு அனுப்பி வைப்பது என முழுவதற்கும் பொறுப்பாளராக வளர்மதி நியமிக்கப்பட்டார். மேலும் அந்த ஏவுதலுக்கு, முதல்கட்ட அனுமதியை வழங்கும் பொறுப்பும் வளர்மதியிடமே ஒப்படைக்கப்பட்டது.

இந்த செயற்கைக்கோளுக்காக வளர்மதி மற்றும் அவரைச் சார்ந்த குழுவினர் நிறைய உழைப்பை நல்கினர். நவீன புத்தம் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இது



உருவாக்கப்பட்டு இருக்கிறது.

நிலநடுக்கம் வருவதை முன்கூட்டியே அறிவிக்கிற மாதிரி இந்த செயற்கைக்கோள் வடிவமைக்கப்பட்டு உள்ளது. காட்டுப்பகுதிகளில் காணாமல் போகிற விமானங்களைக் கண்டுபிடித்து இது தரும். இதன் உதவியால் நம் நாட்டில் விளைகிற தானிய உற்பத்திகளைப் பற்றிக்கூட கணிக்க முடியும்.

இந்த வேலைகளுக்கெல்லாம் மற்ற நாடுகளையே நம்பிக் கொண்டிருந்த இந்தியா, இனிமேல் அப்படிக் கையேந்தி நிற்கத் தேவையில்லை. நம்மால் எதையும் செய்ய முடியும் என நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள் வளர்மதி மற்றும் குழுவினர்.

தான் ஒரு பெண்ணாக இருந்தும், தன் கீழ் பணிபுரிந்த அனைவரும், தன்னை தலைமைப் பண்பு கொண்ட ஒருவராகப் பார்த்ததாகக் கூறும் வளர்மதி, பாலின பாகுபாடு இல்லாமல் அனைவரும் ரிசாட்1 திட்டத்திற்கு ஒத்துழைத்தாகக் கூறுகிறார். ரிசாட்1 திட்டத்தை வெற்றிகரமாக வழிநடத்தியதற்காக 2015ஆம் ஆண்டு வளர்மதிக்கு தமிழக அரசு ஏ.பி.ஜே அப்துல் கலாம் விருதை வழங்கி கௌரவித்தது. அப்போதைய முதல்வர் ஜெயலலிதா வளர்மதிக்கு விருதினை வழங்கி, பாராட்டிப் பேசினார்.

அதனைத் தொடர்ந்து இஸ்ரோவில் வளர்மதிக்கு பல்வேறு பிற பொறுப்புகள் வழங்கப்பட்டன.

"அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு "என்று ஒரு காலத்தில் பேசப்பட்டது.அதை தகர்த்தெறிந்து செயற்கைக்கோள் போன்ற அறிவியல் துறையிலும் அளப்பரிய சாதனைகளைச் செய்யமுடியும் என்று நிரூபித்தவர் வளர்மதி

– சுஜாதாமூர்த்தி

# இந்திய இறையாண்மைக்கு ஊறுவிளைவிப்பதா?

**- துடுப்பதி ரகுநாதன்**



ஒரு பெரிய குடும்பத் தலைவன் தன் மகன்கள், மருமகள்கள், பேரன் பேத்திகளை வைத்து அவர்கள் மனம் கோணாமல் திருப்தி படுத்தி, குடும்பத்தை நேர்வழியில் கொண்டு செல்வது எவ்வளவு கடினம் என்பது ஒவ்வொரு நல்ல குடும்பத் தலைவர்களுக்கும் தெரியும்! அதை விட ஆயிரம் மடங்கு கடினமானது பல லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கட்சியை வழி நடத்துவது!

அதே கட்சி ஆளும் கட்சியாக வந்து விட்டால், கோடிக் கணக்கான மக்களையும் எதிர் கட்சிகளையும் திருப்தி படுத்துவது மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட செயலாகவே இன்று இருக்கிறது! அந்தப் பொறுப்பில் இன்று இருக்கும் தமிழ் நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஒவ்வொரு நிமிடமும் பல கோடி ரூபாய்களுக்கு சமம் என்பது எங்களுக்குத் தெரியும்!

அதைப் புரிந்து கொண்டே இந்த வேண்டுகோளை தமிழ் நாடு முதல்வர் அவர்களுக்கு வைக்கிறோம்! சில நிமிடங்களை எங்களுக்காக ஒதுக்கிவைத்து இந்த பிரச்னை பற்றியும் அவர்கள் ஆலோசனை செய்ய வேண்டும் என்று விரும்புகிறோம்!

வலிமை மிக்க நாடாக இந்தியா இருந்தால் தான், இன்றைய வல்லரசு நாடுகளுக்கு மத்தியில் தலை நிமிர்ந்து நிலைத்து நிற்க முடியும் என்று இந்திய மக்கள் உணர்ந்து கொண்டிருப்பதால் தான் நம் நாட்டின் ஒருமைப்பாட்டை இன்றும் நூறு கோடி மக்களுக்கு மேல் மனசார விரும்புகிறார்கள்!

இன்றைய வல்லரசு நாடுகளின் மத்தியில் ஒன்றுபட்ட இந்தியாவால் தான் நம் உரிமைக்காக போராட முடியும் என்பது எங்களுக்கு நன்றாகப் புரிகிறது! இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தவர்களும் சரி, நமக்காக அரசியல் சாசனத்தை உருவாக்கி கொடுத்தவர்களும் சரி, அதை அன்றே உணர்ந்து இந்தியா சிதறி விடாமல் இருக்க, ஒருமைப் பாட்டை அவர்கள் உயிருக்கு மேலாக நேசித்து, அதற்கு ஏற்ப நமக்கு அரசியல் சாசனத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளனர்! அவர்கள் உருவாக்கிக் கொடுத்த நம் அரசியல் சாசனத்தின் உயிர் நாடியே இந்திய ஒருமைபாடு தான்! பல மொழிகள் பேசுபவர்களும், பல மதத்தினரும், பல பண்பாடு உள்ளவர்களும் எல்லோரையும் இணைத்தே இந்திய ஒன்றிய அரசை அன்று அவர்கள் உருவாக்கினார்கள்!

நமது அரசமைப்பு சட்டத்தை உருவாக்கியவர்கள் அந்தக் காலத்திலேயே, அதில் சிணிழிஜிஸிகிலி நிளிகூஷிணிஸிழிவிணிழிஜி என்ற வார்த்தையை தவிர்த்து, ஹிழிமிளிழி நிளிசூஷிணிவிழிவிணிழிஜி என்ற வார்த்தையை 430 முறை நமது அரசியல் சாசனத்தில் பயன் படுத்தியிருக்கிறார்களாம்!

மாநில அரசுகள் (STATE GOVEMNMENT) மத்திய அரசின் (CENTRAL GOVEMNMENT) கிளைகள் என்று இந்திய விடுதலைக்குப் பின் இன்று வந்த பல அரசியல் தலைவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

ஆனால் நமது அரசியல் சாசனத்தை திருத்த வேண்டும் என்பது ஒரு சாதாரண காரியம் அல்ல! பெரும்பான்மையை வைத்துக் கொண்டு அரசிலமைப்பு சட்டத்தின் கட்டுமானத்தை மாற்ற முடியாது என்று சட்ட நிபுணர்கள் சொல்கிறார்கள்!



அன்றே மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கூட, எல்லா அதிகாரமும் மத்திய அரசுக்கு இல்லை என்பதை 'வெளியேறுக மிகுதியான அதிகார குவிப்பு. வருக உண்மையான கூட்டாட்சி" என்று எழுதியிருக்கிறார்.

மாநில அரசுகள் (STATE GOVEMNMENT) இந்திய ஒன்றிய அரசின் கிளைகள் என்று இன்று வரும் பல புதிய பாராளுமன்ற உறுப்பினர்களும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

இன்று இந்தியாவில் வாழும் பல மாநில மக்களுக்கும் சரி, அரசியல் வாதிகளுக்கும் சரி, யாருக்கும் நமது அரசியல் அமைப்பு சட்டம் என்ன சொல்கிறது என்று தெரியவில்லை என்று தான் இன்று நினைக்கத் தோன்றுகிறது! பெரும் பான்மை கைகளில் இருந்தால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று தான் அவர்கள் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்! அரசியலமைப்பு சட்டத்தைத் திருத்த நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் இருந்தால் கூட, அதன் அடிப்படைக் கட்டுமானங்களை மாற்ற அதிகாரம் இல்லை! என்று 1973 ம் ஆண்டு 13 நீதிபதிகள் அளித்த தீர்ப்பில் ஏற்கனவே கூறியிருக்கிறார்கள்!

அதன் பின் எது அடிப்படை கட்டுமானம் என் கேள்வி எழுந்தது! 1994 ல் எஸ். ஆர். பொம்மை வழக்கில் உச்ச நீதி மன்றம் அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படை அதாவது கட்டுமானம் என்பது கூட்டாச்சி தத்துவமே! என்று தெளிவாக கூறியிருக்கிறது!

பெரும் பான்மை இருந்தால் அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படை அதாவது கட்டுமானம் என்ற கூட்டாச்சி தத்துவத்தை எல்லாம் தூக்கி எறிந்து விட்டு, இஷ்டம் போல் எதையும் ஒன்றிய அரசு செய்து விட முடியுமா என்பதை மக்கள் தெரிந்து கொள்ள ஆசைப் படுகிறார்கள்! பெரும்பான்மை மொழி பேசுபவர்கள், பெரும்பான்மை மதத்தைச் சேர்ந்தவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப சிறு பான்மை மதத்தினர், சிறுபான்மை மொழி பேசுபவர்கள் எல்லோரும், அனுசரித்து அடங்கிப் போய் விட வேண்டும் என்று தான் நம் அரசியல் சட்டம் சொல்கிறதா என்பதை சட்ட வல்லுநர்களும் அறிஞர்களும் சேர்ந்து, இன்று நம் மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்!

சமீப காலமாக பத்திரிகைகள், ஊடகங்கள், முக நூல்கள் ஆகியவைகளில் காணப் படும் செய்திகள் மக்களுக்கு மகிழ்ச்சி தருவதாக இல்லை! தமிழ் நாட்டில் செயல்படும் பாரத ஸ்டேட் வங்கி கிளைகளில் பணம் கட்டும் சலான்களில் உலக தொடர்பு மொழியான ஆங்கிலத்தையும், நமது தாய் மொழியான தமிழையும் நீக்கி விட்டு முற்றிலும் இந்தி என்ற ஒரே மொழியிலேயே இருந்ததாம்!

யாரோ ஒரு தமிழ் மகன் அந்த வங்கி மேலாளரிடம் எனக்கு உலக தொடர்பு மொழி ஆங்கிலம் தெரியும், என் தாய் மொழி தமிழ் தெரியும் சலான் இந்தி மொழியில் மட்டும் இருக்கிறது அதை நான் எப்படி பூர்த்தி செய்வது என்று வாக்குவாதம் செய்து கொண்டிருப்பதை ஊடகத்தில் பார்த்தோம்! தமிழ் நாட்டில் இருக்கும் மத்திய அரசின் அலுவலங்களுக்கு இன்று வரும் சுற்றறிக்கைகள் கூட இது வரை உலக தொடர்பு மொழியான ஆங்கிலத்தில் வந்து



கொண்டிருந்ததை தவிர்த்து விட்டு, பக்கம் பக்கமாக இந்தி மொழியிலேயே வருவதாகப் பத்திரிகையில் செய்திகள் வந்தன!

தமிழ் நாட்டில் செயல்படும் சில மத்திய அரசு அலுவலங்களில் தமிழ் தெரியாத முக்கிய அதிகாரிகளையே பதவிகளில் நியமித்திருப்பதாகவும் பத்திரிகைகளில் மேலும் பல செய்திகள் வருகின்றன! அவர்களிடம் சாதாரணமாக தாய் மொழியை மட்டுமே அறிந்த தமிழ் மக்கள் எப்படி போய் தங்கள் குறைகளைச் சொல்ல முடியும்? பல முக்கிய சாலை அறிவிப்பு பலகைகள் கூட இந்தி மொழியில் மட்டும் இருந்ததாகச் சொல்கிறார்கள்! சமீபத்தில் தமிழ் நாட்டில் செயல் படும் அஞ்சல் அலுவலகங்களில் கூட தமிழ் அகற்றப் பட்டதாகச் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளன!

சில நாட்களுக்கு முன்பு தமிழ் நாடு நிதி அமைச்சரை தமிழ் நாட்டில் இருக்கும் ஒரு விமான நிலையத்தில் இந்தி மட்டுமே பேசத் தெரிந்த ஒரு அதிகாரி மடக்கி அவரை இந்தி மொழியிலே கேள்விகள் கேட்டு தொல்லை கொடுத்திருக்கிறார்.

இதே போல் பாராளுமன்ற உறுப்பினர் கலைஞர் மகள் கனிமொழியிடமும் ஒரு அதிகாரி, அவருக்கு இந்தி மொழி தெரியாததை ஒரு தேசக் குற்றம் போல் பேசியதாக ஒரு செய்தி வந்திருக்கிறது! இது போன்ற நிகழ்ச்சிகள், ஒன்றிய அரசின் செயல்பாடுகள் நிறைய வருகின்றன! இந்தப் போக்கு நீடித்தால், விரைவில் எல்லாப் பெயர் பலகைகள், வங்கிச் சலான்கள் எல்லாம் இனி இந்தி மொழியில் மட்டுமே வரத் தொடங்கி விடலாம்! பல்வேறு மொழி பேசும் இந்திய மக்களுக்கு இன்று வரை அன்றைய பிரதமர் நேரு கொடுத்த உலகத் தொடர்பு மொழியான ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருந்து வருகிறது! அன்றைய பிரதமர் நேரு கொடுத்து வாக்குறுதியை தூக்கி குப்பையில் போட்டு விட்டு, இனி இந்தியாவில் எந்த மொழியை தாய் மொழியாக கொண்டிருந்தாலும், இந்திய மக்கள் அனைவரும் புதியதாக இந்தி மொழியைக் கற்றுக் கொண்டு, அனைத்து மொழி பேசும் மக்களும் இனி இந்தியை மட்டும் தொடர்பு மொழியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிடுவது போல் இருக்கிறது!

தமிழ் நாட்டில் இன்று இந்தி மொழி தெரியாத I.A.S. I.P.S, M.A., M.Phil, M.Litt, M.S. M.D. போன்ற உயர் படிப்பு படித்தவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள்! இன்னும் நம் கிராமங்களில் ஒரு பெயர் பலகை படிக்கத் தெரியாதவனை, ஒரு சலானை பூர்த்தி செய்யத் தெரியாதவர்களை எல்லாம் கை நாட்டு, அல்லது தற்குறி என்று தான் சொல்வார்கள்! விரைவில் திடீரென எல்லாம் இந்தி என்ற ஒரே மொழிக்கு மாறினால் அந்த நிலை தான், இந்த படித்த மேதைகளுக்கும் தற்பொழுது ஏற்பட்டு விடுமோ என்ற பயமாக இருக்கிறது!

இந்தி தெரியாத ஒரு மாநில முதல்வருக்கு இனி மேல் ஒன்றிய அரசிடமிருந்து வரும் கடிதம் இந்தியில் மட்டும் வந்தால், அதை படிக்கத் தெரியாத அவரை என்னவென்று அழைப்பது என்றும் புரியவில்லை! இந்தி மொழி தவிர மற்ற மொழி பேசுபவர்களுக்கு இந்த நிலையில் என்றால், சிறுபான்மை மதத்தினர், பண்பாடு உள்ளவர்கள் எல்லாம் பெரும்பான்மை மதத்தினரை அனுசரித்து போனால் தான் இந்தியாவில் வாழ முடியும் என்ற தொனியில் ஒரே மொழி, ஒரே மதம் என்று எல்லாம் ஆளும் கட்சியினர் பேசிக் கொண்டிருக்கிறார்கள்!

வெள்ளையனை வெளியேற்றி விட்டு, பல மதத்தினர், பல மொழியினர், பல பண்பாடு உடையவர்களை எல்லாம் ஒன்று இணைத்து இந்தியா என்ற ஒன்றிய அரசு அன்று உருவாக்கப் பட்ட பொழுது,

செப்பு மொழி பதினெட்டு உடையாள் எனிலும்
சிந்தனையொன்று உடையாள்

என்ற மகா கவி பாரதியின் கருத்தை ஏற்று

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு
நாம் எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு!
ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று!

என்று தான் இந்திய மக்கள் அனைவரும் அன்று ஒன்றிணைந்தார்கள்! அன்று நமக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தவர்களும் நாம் எல்லோரும் சமம் என்பதை மனசில் வைத்து தான், நம் அரசியல் சாசனத்தை உருவாக்கினார்கள்!

பெரும்பான்மை இருந்தால் நம் அரசியல் சாசனத்தில் சொல்லப்பட்டதை எல்லாம் மதிக்க வேண்டுமா, வேண்டாமா என்பது போன்ற சந்தேகங்கள் தற்பொழுது ஏற்பட்டு வருகிறது.. இந்த சூழ்நிலையில் நம் அரசியல் சாசனம் என்ன சொல்கிறது... பெரும்பான்மை இருந்தால் அரசில் சாசனத்தை நாம் மதிக்க வேண்டாமா.... எல்லோரும் சமம் என்று அன்று ஒன்று படுத்திய ஒன்றிய இந்திய அரசுக்கு மதிப்பு இனி இல்லையா..... என்பதை எல்லாம் மிகச் சிறந்த சட்ட வல்லுநர்களும், அரசியல் மேதைகளும் தான் மக்களுக்கு தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும்! இல்லா விட்டால் ஒரே மொழி, ஒரே மதம் என்று படிப்படியாக கோஷங்கள் பெருகிக் கொண்டே போய், இந்திய ஒருமைப்பாடு சீர் குலைந்து விடும்! எதிர்காலத்தில் இந்தியாவில் வாழும் அனைத்து மொழி பேசும் மக்களும், அனைத்து மதத்தைச் சார்ந்தவர்களும் சமம் என்று சொல்பவர்களைப் பிடித்து தீவிர வாதிகள் என்று சொல்லி தண்டிக்கும் காலம் வந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை! இன்று கூட அதே கருத்துகளை வலியுறுத்தும் ஒன்றிய அரசு, மாநில சுயாட்சி போன்ற சொற்களை நீங்கள் அதிகம் பயன் படுத்துவதால், உங்களையும் மத்தியில் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் ஒரு விரோதியைப் போல் தான் பார்க்கிறார்கள்! இது பற்றி நமக்கு ஒரு தெளிவு வர வேண்டும் என்றால் இந்திய அரசியல் சாசனம் பற்றி ஓரளவாவது இந்தியாவில் வாழும் பலதரப் பட்ட மனிதர்களும் தெரிந்து இருக்க வேண்டும்!

இன்றைய இந்தியாவில் இருக்கும் அனைத்து மாநில முதல்வர்கள், உச்ச நீதி மன்றம், உயர் நீதி மன்றத்தில் பணியாற்றும் மிக சிறந்த வழக்கறிஞர்கள், உச்ச நீதி மன்ற, உயர் நீதி மன்ற நீதிபதிகள் அடங்கிய ஒரு மாநாட்டிற்கு ஏற்பாடு செய்து அதில் இந்திய அரசியல் சாசனம் என்ன சொல்கிறது, பாராளுமன்றத்தில் பெரும் பான்மையைத் தேடிக் கொண்டால், அரசியல் சாசனத்தை மதிக்க வேண்டுமா, அல்லது அன்றைய பிரதமர் நேருவின் வாக்குறுதியைப் போல் புறம் தள்ளி விடலாமா போன்ற விபரங்களை ஆய்வு செய்து தெரிவித்தால் இந்தியாவில் வாழும் 130 கோடி மக்களும் எதிர் காலத்தில் இந்திய ஒன்றிய அரசு எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதை தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும்!

தமிழக முதல்வர் அப்படி ஒரு ஏற்பாட்டை நமக்கு செய்து கொடுத்தால், அவர் இந்திய துணைக் கண்டத்தின் கட்டுமானத்தை, இந்திய அரசியல் சாசனத்தைக் காத்த தூண்களில் ஒருவராகவே எதிர் காலத்தில் இந்திய மக்களால் மதிக்கப்படுவார்! நீங்களும் உங்கள் அரசும் இந்திய அரசியல் சாசனத்தை மனதில் வைத்து தான், சமீப காலத்தில் ஒன்றிய அரசு, மாநில சுயாட்சி போன்ற சொற்களைப் பயன் படுத்தி வருகிறீர்கள்! அதனால் இப்படி ஒரு ஏற்பாடு செய்ய தகுதியான ஒரே நபர் நீங்கள் தான் என்று நாங்கள் நம்புகிறோம்! தயவு செய்து இந்த வேண்டுகோளை பரிசீலனை செய்ய வேண்டுகிறோம்!

# நகைக் கடன் தள்ளுபடியும் நடைமுறைச் சிக்கலும்!

**-விளக்கம் தருகிறார் தமிழ்நாடு கூட்டுறவு சங்க சம்மேளனப் பொதுச்செயலாளர் திரு.E.சர்வேசன்**



தமிழகத்தில் நகைக்கடன் வழங்கும் கூட்டுறவு வங்கிகள் / கூட்டுறவு சங்கங்கள் ஏராளமாக உள்ளன முதலில் அவை பற்றி பார்ப்போம்.

**பாரத ரிசர்வ் வங்கி கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு வங்கிகள்**

1) ஒரு மாநிலத்தலைமை கூட்டுறவு வங்கி அதன் 47 கிளைகள்

2) 23மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் அதன் 908 கிளைகள்

3) 128 நகர கூட்டுறவு வங்கிகள் அதன் 181 கிளைகள்

**கூட்டுறவு சங்கங்கள்**

4) தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் 4451

5) த.ந வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஒன்று

6) தொடக்க வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி 180

7) நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் 116

தமிழகத்தில் மேற்கண்ட கூட்டுறவு நிறுவனங்கள் அத்துனையிலும் சுமார் 6000க்கும் மேற்பட்ட இடங்களில் நகைக்கடன் வழங்கப்படுகிறது.

**கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் சுற்றறிக்கைகள் படி நகைக்கடன் வழங்கும் விதிமுறைகள்**

1 ) நகைக்கடன் கிராம் ஒன்றுக்கு அன்றைய தின சந்தை மதிப்பில் 75 % அளவிற்கு கடன் வழங்க வேண்டும்.

2) பதிவாளர் சுற்றறிக்கைக்கு உட்பட்டு அவ்வப்போது கிராமுக்கு வழங்கும் கடன் அளவை நிறுவனங்கள் நிர்ணயித்து கொள்ளும்.

3) ஒரு தனி நபருக்கு அதிகபட்சம் 20 லட்சம் கடன் வழங்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது

4) ஒருவர் ஒன்றுக்கு மேற்ப்பட்ட கடன் பெறலாம் அனால் அதன் கூட்டுத்தொகை 20 லட்சத்துக்குட்பட்டு இருக்க வேண்டும்

ஆனால் ஊடகங்கள் பத்திரிக்கைகளில் ஒரே நபர் பல கடன்கள் பெற்றுள்ளார் அது முறைகேடு என்றும் ஒரே குடும்பத்தில் பல நபர்கள் கடன் பெற்றுள்ளார்கள் அது முறைகேடு என்றும் ஒரே நபர் ஒரே ஆதாரை ரேசன் கார்டை பயன்படுத்தி வெவ்வேறு கூட்டுறவு வங்கிகளில் சங்கங்களில் கடன் பெற்றுள்ளார்கள் அது முறைகேடுகள் என்றும் செய்திகள் வெளியிட்டார்கள் .

ஆனால் ஒரு நபர் பலகடன்களை பெற்றதோ அல்லது ஒரே குடும்பத்தில் பல நபர்கள் கடன் பெற்றதையோ முறைகேடு என பதிவாளர் சுற்றறிக்கையில் குறிப்பிடவில்லை.

ஒரு கூட்டுறவு வங்கியில் நகைக்கடன் பெறுவோர் இன்னொரு கூட்டுறவு வங்கிகளில் நகைக்கடன் பெறுவதை தடுக்க எந்த சாப்ட்வேறும் இல்லாத நிலையில் அது எவ்வாறு முறைகேடு ஆகும்.



**அனால் முறைகேடு என்பது**

1) நகைகளே இல்லாமல் நகைக்கடன் வழங்கியது

2) போலி நகைகளுக்கு கடன் வழங்கியது

விதி மீறல் என்பது ஒரு நபருக்கு ரூபாய் 20 லட்சத்திற்கு மேல் கடன் வழங்கியது ஆகும்

தேர்தல் வாக்குறுதிகளில் 5 பவுன் மற்றும் 6 பவுன் நகை தள்ளுபடி என்ற அறிவிப்புகள் வந்தபோதுமக்கள் தங்களிடம் உள்ள நகைகளை கூட்டுறவு வங்கிகளில் வைத்தால் தள்ளுபடி கிடைக்கும் இதனால் அவர்களின் பொருளாதார பிரச்சனைகள் தீரும் என்ற எதிர்பார்ப்பில் நகைக்கடன்களை வைத்தார்கள். இது சாதாரணமாக மக்களின் இயல்பே ஆகும்.

இதில் கூட்டுறவு வங்கிகள்/ கூட்டுறவுசங்கங்களின் தவறு ஏதும் இல்லை.

ஆனால் ஒரு சில சங்கங்களில் நடந்த தவறுகளை குறிப்பிட்டு ஒட்டு மொத்த கூட்டுறவு வங்கிகளிலும்/சங்கங்களிலும் முறைகேடுகள் என்பது நுற்றாண்டு கூட்டுறவை சிதைப்பது ஆகும்.

தமிழக மக்களின் நம்பிக்கையை பெற்று நூறாண்டு கண்ட கூட்டுறவு இயக்கம் சுமார் ரூபாய் 50000 கோடி வைப்புகளை கொண்டுள்ளது ஏழை எளிய நடுத்தர மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்க்காக செயலாற்றிவருகிறது.

அதே நேரத்தில் ஒரு சில இடங்களில் நடந்திட்ட முறைகேடுகளை தவறுகளை பெரிதாக்கி கூட்டுறவின் ஆணிவேரையே அசைத்து வீழ்த்தி விடும் நிலையை ஏற்படுத்த வேண்டாம் என்பதை தெரிவித்துகொள்கிறோம்.

கடந்த அஇஅதிமுக ஆட்சியில் 13.07.2020 தேதியில் தமிழ்நாடு மாநில கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்திலிருந்து கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் (சட்டம் மற்றும் பயிற்சி) அவர்கள்அனைத்து கூட்டுறவு நிறுவனங்களிலும் நகைக்கடன் வழங்கலை உடனடியாக நிறுத்தக்கூறி ஒரு குறுஞ்செய்தியை அனைத்து மாவட்ட மண்டல இணைப் பதிவாளர்களுக்கும் அனுப்பப்பட்டது.

நிறுத்தப்படுவதறக்கான காரணமோ அல்லது மீண்டும் எப்போதிலிருந்து வழங்கலாம் என்றோ குறிப்பிடப்படவில்லை.

ஒரு குறுஞ்செய்தியில் ஒட்டுமொத்த கூட்டுறவு நிறுவனங்களும் நகைக்கடன் வழங்களை நிறுத்தியிருப்பது ஏற்க இயலாதுஎன்பதை சுட்டிக்காட்டி அரசுக்கும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கும் கடிதம் அளித்து ஊடகங்களுக்கும்



செய்தி கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனம் (befi) சார்பில் அனுப்பப்பட்டது.

இக்கடிதத்தினை அன்றய எதிர்க்கட்சி தலைவராக இருந்த இன்றய மாண்பு மிகு தமிழக முதல்வர் தனது ட்விட்டார் பக்கத்தில் வெளியீட்டு அஇஅதிமுக ஆட்சியினை கேள்விக்குடக்கினார். அடுத்த நாள் கடன் வழங்கல் துவக்கப்பட்டது.

இந்நிகழ்வு ஏன் நடைபெற்றது என்பதை அரசு விசாரிக்க வேண்டும் அப்போது என்ன முறைகேடு நடந்தது அதை அதிகாரிகள் எப்படி மூடி மறைத்தார்கள் என்பதை அரசு வெளிக்கொணர வேண்டும்.

**தள்ளுபடி தொகை:**

பயிர்க்கடன் தள்ளுபடி தொகை ரூபாய் 12100.

சுய உ தவிக்குழுகடன் தள்ளுபடி ரூபாய் 2750.

நகைக்கடன் தள்ளுபடி சுமார் ரூபாய் 5150.

ஆக 20000 கோடி ரூபாய் தள்ளுபடியினை கூட்டுறவுகள் சந்திக்கின்றன.

இத் தொகையினை அரசு வட்டியுடன் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கவேண்டும்.

அரசு முதல் தவனையாக ரூபாய் 5000 கோடி கூட்டுறவுகளுக்கு அளிக்கிறது எனில் அத்தொகையை வாடிக்கையாளர்களுக்கு உடனடியாக கடனாக கொடுத்தால் மட்டுமே வட்டி வருவாய் ஈட்டமுடியும் அதன் மூலம் லாபம் ஈட்டும் நிறுவனமாக கூட்டுறவுகள் இருக்கும்.

- **சர்வேசன்.E**
பொதுசெயலாளர்
கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனம்
தமிழ்நாடு (BEFI-CBEF)
Email cbeftn@gmail.com



# சொல் ஒன்று: பலன்கள் பலவகை

பணமே.. உனக்குத் தான் எத்தனை பெயர்கள்?

அர்ச்சகருக்கு கொடுத்தால் தட்சணை என்றும்.

கோயில் உண்டியலில் செலுத்தினால் காணிக்கை என்றும்.

யாசிப்பவருக்குக் கொடுத்தால் பிச்சை என்றும்.

கல்விக் கூடங்களிலோ கட்டணம் என்றும்.

திருமணத்தில் வரதட்சணை என்றும்.

திருமண விலக்கில் ஜீவனாம்சம் என்றும்.

விபத்துகளில் இறந்தால், நஷ்டஈடு என்றும்.

ஏழைகள் கேட்டுக் கொடுத்தால், தர்மம் என்றும்.

நாமாக விரும்பி ஏழைகளுக்கு கொடுத்தால் தானம் என்றும்.

திருமண வீடுகளில் பரிசாக மொய் என்றும்.

திருப்பித்தர வேண்டும் என யாருக்காவது கொடுத்தால், அது கடன் என்றும்.

திருப்பிதர வேண்டாம் என இலவசமாகக் கொடுத்தால் அது அன்பளிப்பு என்றும்.

விரும்பிக் கொடுத்தால் நன்கொடை என்றும்.

நீதிமன்றத்தில் செலுத்தினால் அபராதம் என்றும்.

அரசுக்குச் செலுத்தினால் வரி என்றும்.

அரசு, பொது, தர்ம ஸ்பானங்களுக்கு கொடுத்தால் அது நிதி என்றும்.

செய்த வேலைக்கு, மாதந்தோறும் கிடைப்பது சம்பளம் என்றும்.

தினமும் கிடைப்பது கூலி என்றும்.

பணி ஓய்வு பெற்றால் கிடைப்பது ஓய்வூதியம் என்றும்.

சட்டத்திற்கு விரோதமாக கையூட்டு வாங்குவதும், கொடுப்பதும் லஞ்சம் என்றும்.

கடன் வாங்கினால் *அத்தொகைக்குஅசல் என்றும்.

வாங்கிய கடனுக்குக் கொடுக்கும் போது வட்டி என்றும்.

தொழில் தொடங்கும் போது போடும் அதற்கு முதல் என்றும்.

தொழிலில் கிடைக்கும் வருமானத்துக்கு இலாபம் என்றும்.

குருவிற்குக் கொடுக்கும்போது குருதட்சணை என்றும்.

ஹோட்டலில் நல்குவது டிப்ஸ் என்றும்.

இவ்வாறு பல பெயர்களில் கைமாறும் இந்த பணத்திற்கு மாற்றாக...

வேறொன்றும் இப்புவியில் இல்லை !

**வாட்ஸ் அப் பதிவு:**

**ச.பழனி(ஆசிரியர்_ஓய்வு)**

**புதுமாவிலங்கை)**

EPISODE: 6

# Head for the article

# ANCIENT KINGDOM'S OF CHERA, CHOLA AND PANDYAS

In the 10"th chapter and narrated about The Great Vendhar Second Karikalan who was responsible for the construction of " KALLANAI(GRAND ANICUT) in the years between 180 B C to 175 b.c.He was responsible for maintaining cordial relationships with all other Kings including Chera and Pandias which paved the war economic developments including agricultural products. This Vendhan SECOND Karikalan is still remembered by the people for the construction of Kallanai. Rasasuyam Vetta Perunarkilli became the CHOLA Vendhan in 170 B.C. The Poet Avvaiyar, during her last years in 165B.C, sang praises about 3 Vendhars including him , Pandian Ukkira Peruvazhuthi and Chran Marivenko. Vendhar Perunarkilli imprisoned Kanaikkal Iruborai in 150 B.C where he died in the prison.He ruled for 25 years from 170 B.C to 145 B.C. Then , Kulamutrathu Tunjiya Killivalvan became King and ruled for about 25 years. He besieged Karur and conquered it 135 B.C . Cheran Mokkothai came to power in the same year and made peace with the CHOLA. He ruled for 25 years from 145 B.C to 120 B.C. His successor was Perundhirumavalavan, grand son of Second Karikalan. He and Pandian Velliyambalathu Tunjiya Peruvazhuthi were Great friends He ruled for 20 years from 120 B.C to 100B C. After his death Cholan Nalankilli came to power who invaded and conquered Ujjain of Sunga dynasty that ruled Magadha Kingdom around 80 B.C. He was said to have had great fleets and conquered Eelam. He was a contemporary ( the meaning of contemporary is , that during the same period) of Cheran Kuttuvan Kothai He ruled for 25 years from 100 B.C to 75 B.C. His son Nalankilli Chet Chenni ruled from 75 B.C to 50 B.C HE WAS THE LAST CHOLA VENDHAN OF SANGAM AGE From Perumboot Chenni to Nalankilli Chet Chenni, 11 CHOLA Vendhars had been in existence for a total of 285 years from 335 B.C to 50 B C. It may be remembered that Seruppali Eridha Ilanchet Chenni defeated Mouryan invasion of Tamizhagam and Cholan Nalankilli was the conqueror of the city of Ujjain of Sunga dynasty These two events are firmly determined using Indian and world historical chronology. So eventhough the years of the individual Vendhars are approximate, the years of reign of the entire Chola Vendhars are definite. Pandyas. According to the literary computation, Pandian Karungai Olval Perumpeyar Vazhuthi was a contemporary of Uthiyan Cheralathan and Cholan Perumboot Chenni. He ruled for 30 years from 350 b.c to 320 b.c . His successor was Muyhukudumi Peruvazhuthi and the Coins issued by him were of 4" th and 3"rd century b.c. He had large naval forces that controlled the east and west coast ports of India.He ruled for 30 years from 320 b.c to 290 b.c. After him, Nambi Nedunchezhian ruled for 20 years from 290 b.c to 270 b.c. Ariappadai kadantha Nedunchezhian who came to power after him, earned his name as a young man when he lead the Pandya forces and defeated the Mouryan Army in 270 B C when Mouryan kingdom was involved in internal wars to capture power after the death of Bindusarar in 272 b.c.( It may be recalled that Ashoka , one of the son of Bindusarar, killed all his other brothers except one brother and became the King of Magadham in 268 B.C. For years SIBLINGS war went on in Magadham,) Ariyapadai Kadantha Nedunchezhian was mentioned in Silapathikaram who was ruled for 25 years from 270 b.c to 245 b.c. Vetrivel Chezhiyan who came to power after him was a contemporary of Cheran Senguttuvan. He ruled as Vendhan for 10 years from 245 b.c to 235 b.c In the next chapter, the remaining Pandian Kings will be discussed.



Concept by:

**Dr. V. BALATHANDAYUTHAPANI**
DCP RTD
Cell: 7904354721


In the 11'th chapter I narrated about Ariyapadai Kadantha Nedunchezhian and his adventures. In fact during his period in 245 b.c, he ordered the killing of Kovalan( the hero of Silapathikaram ) without conducting any enquiry regarding the theft of the Kolusu of his Wife Kopperumdevi . After having known from Kannagi , the wife of assassinated Kovalan, Vendhan Nedunchezhian died instantaneously at the Court Yard .Having known the death of her husband, Kopperumdevi also died instantaneously at the same Court Yard. All these incidents were happened at the very face of Kannagi who argued and proved that her husband Kovalan was not a thief . After the deaths of Vendhan and his wife, then Kannagi burnt MADURAI and reached Western Ghat near Theni where she died. These informations were brought out to Cheran Senguttuvan and his Brother Elangovadigal by Seethalai Sathanar and based on these informations, Elangovadigal wrote Silapathikaram which was known to all. The Pandian Vendhan Vetrivel Chezhian ascended the Throne after the death of Nedunchezhian and MADURAI was brought back to its original fact. Then Cheran Senguttuvan on the advise of Seethalai Sathanar, invaded North India, defeated Kanakan and his brother Vijayan who used to talks bad of Tamilians and further went upto Himalayas and brought Stones for the construction of Kannagi temple. These are all hear say

information which is being in existence till today.

Pandian Vertyvel Chezhian, the brother of the DEMISED Vendhan Nedunchezhian ( Ariyapadai) ascended the Throne of MADURAI and reconstructed the destroyed MADURAI. Vendhan Vertivel Chehian who came to power after him was a contemporary of Cheran Senguttuvan.

Nambi Nedunchezhian, Ariyapadai Kadantha Nedunchezhian and Vetrivel Chezhian were the Kings of Korkkai, who were all later became the Vendhars of Madurai. The coins issued by them when they were the Kings of Korkkai were called as" Chezhiya coins". The period of them and their coins were dated to 3 'rd century B.C.

After Vetrivel Chezhian, Pasumboot Pandian came to power and ruled for 25 years from 235 b.c to 210 B C. After him Pandian Arivudai Nambi came to power. He was a contemporary of Pisirandaiar and Kopperum Cholan. His Vendhar reign was for 10 years from 210 to 200 b.c. The ancient Kingdoms and historical Evidences of Thamilagam have not been brought out completely. Hundreds Stones inscriptions have been collected and being kept by archaeologists in their stores. The northern archaeologists are not at all evincing any interest to release such stone inscriptions for the reason best known to them. They are all aware of the facts that Tamil Civilization is older than any civilization of the world. In fact the ancient Tamilians were living all over Ancient India upto Afghanistan. Similarly Sanskrit also like Tamil language spread in northern part of Ancient India. The stone inscriptions of Sanskrit have not been released and published like Tamil language for the untold reasons. We are here to SALUTE WILLIAM JONES , The British Judge of Calcutta Supreme Court in 1784 A.D( Then Supreme Court India was functioning from Calcutta) was responsible for unearthing our ancient history,released by him. If he was not there our ancient history might not have been known to the world. We will discuss about the same in latter Chapter's. There are hundreds of historians like A.L.Basham , Professor Venkatesan, Engineer Kanian Balan , Pandit Jawahar lal Nehru, Chiris Harmon, Iravavadham Mahadevan Ayyar, V.S Srinivasan Sastry, A.K. Pillai ,Neela Kanda Sastry,P.Durairaj,S.A.A.Rizvi,Majid Husain,Upinder Singh,Dr.G.Venkataraman,Dr.N.K.Mangalamurugaesan,Dr. Rasaya etc. Who had written many books related to our historical and Geographycal matters but none is having identical opinions about the happenings in our ancient India and the world. Iam having my own way of writings after weighing the pros and cons by visiting various libraries and also analyzing the authors of various historians.



During the periods of ALEXANDER from 336 b.c to 323 b.c many scholars who accompanied The Great ALEXANDER written about Western India and his occupied territories of western Asia and Northern Africa. Hundreds of Ancient historical Evidences have been destroyed during the wars and none was there to give exact informations but have been COLLECTED due to heresay messages stone

inscriptions,Olaichuvadies. Similarly in our ancient Tamilagam , frequent wars between the ancient Kingdoms were also responsible for the destruction of exact informations about historical developments. Fortunately our intelligent historians were responsible for the collection of ancient history related materials and now we are all utilizing to quench our thirst of history. The pandias continued the rule and Palaiyan Maran succeded Vendhar Arivudai Nambi. Vendhan Palaiyan Maran was defeated by Cholan Killivalavan and Madurai was seized in 193 B.C,his tenure was 15 years from 200 B.C to 185 B.C.He was succeded by Talaiyanganam Seruvendra Nedunchezhiyan .His famous battle of Talaiyanganam took place in 183 B.C.This war made the Pandyas more powerful and caused the whole Tamizhagam to shiver in fear.He has been sung by 11 sangam poets,he was also a poet.He besieged Musiri and seized great fortune and he ruled as Vendhan for 20 years from 185 B.C to 165 B.C.His successor was Ilavanthigai Palli Nanmaran.His tenure was 20 years form 165 B.C to 145 B.C.He was succeded by Ukkira Peruvazhuthi who compiled Akananuru and issued the portrait inscribed coins.He ruled for 15 years,from 120 B.C to 105 B.C.He was succeded by Koodakarathu Tunjiya Maran Vazhuthi,who was the last Pandya vendhan of the Sangam age.He was a contemporary of Cholan Nallankilli and Kuttuvan Kothai.He compiled Natrinai and ruled for 35 years from 105 B.C to 70 B.C.Peruvazhuthi coins issued by Murhu Kudumi Peruvazhuthi,Chezhiya coins issued by Pandyas of Korkai,portrait inscribed coins of Peruvazhuthis,and literary computations provide a solid basis for the existence of the 14 Pandya Vendhars who ruled for 280 years from 350 B.C to 70 B.C.So even though the years of the individual rulers are approximate,the years of reign of the entire Pandya Vendhars and definite.In ancient Tamizhagam ,in the 300 years from 340 B.C to 50 B.C,14 Chera Vendhars,11 Chola Vendhars and 14 Pandya Vendhars had been ruling.Most of them became Kings first and later Vendhars.There were also other kings who did not become Vendhars.These kings are not spoken of here .The historical period of Tamil Vendhars who ruled for over 300 years is computed by compiling,organizing and merging information based on the following:World history,Indian history l,the period of Mamulanar and Cheran Senguttuvan,period of the coins found,the period of the inscriptions,the time of the comet,the computations of Sangam period based on Sangam literature,and the historical facts mentioned before.Interconnections have been established between the aforementioned facts,thus strengthening their authenticity. History has been completed by filling gaps using cause and effect basis,common sense and by the logical method.

In the next chapter we will see about the ancient Kingdoms existed in Northern India,Central India,China,Iran,Mesopotomia(present Iraq),North Africa including Egypt,Greeks and Roman's etc.




இதுதான் வாழ்க்கை! கேரள வெள்ளம் உணர்த்தும் பாடம் !

இந்தப் பகுதி இன்னும் அரைமணி நேரத்தில் மூழ்கிவிடும்.

முக்கியமானதை மட்டும் எடுத்துக்கொண்டு வெளியேறுங்கள்"

இதைக் கேட்டபோது அவர்கள் முழங்கால் அளவு தண்ணீரில் நின்றுகொண்டிருந்தார்கள்.

இப்போது அவர்கள் பிரச்சினை.

எதையெல்லாம் எடுத்துக்கொள்வது என்பதல்ல எதையெல்லாம் கைவிடுவது என்பதுதான்.

முதலில் கைகளில் எதையெல்லாம் தூக்கிக்கொள்ள முடியாதோ அதையெல்லாம் கைவிட்டார்கள்.

பிறகும் கைவிடுவதற்கு ஏராளமாக இருந்தன.

பரிசுப்பொருள்கள்

தெய்வப்படங்கள்

புகைப்பட ஆல்பங்கள்

ஆடைகள்

உள்ளாடைகள்

புத்தகங்கள்

இசைக்கருவிகள்

இசைப்பேழைகள்

ஸ்பூன்கள்



கண்ணாடிக் கோப்பைகள்

பொம்மைகள்

கண்ணீரின் உப்புப் படிந்த தலையணைகள்

உடல் வாசனையுள்ள போர்வைகள்

அழகு சாதனப்பொருள்கள்

கைவிடுவதற்கு முடிவேயில்லாமல் ஏராளமாக இருந்தன.

நீங்கள் கைவிடும்போது உங்கள் மனதை ஒரு பனிக்கட்டியைப்போல உறையச் செய்ய வேண்டும்





எவ்வளவு கருணையற்றவராக இருக்கமுடியுமோ அவ்வளவு கருணயற்றவராக மாறவேண்டும்

ஒரு தூக்கிலிடுபவனைப்போல உங்கள் கண்கள் மரத்துப் போக வேண்டும்.

ஒரு பாலித்தீன் பை அளவுக்கு மட்டுமே எதையும் எடுத்துக்கொள்ள அவர்களுக்கு அவகாசம் இருந்தது. அனுமதி இருந்தது.

அவர்கள் ஒரு பிரம்மாண்டமான விற்பனையகத்தின் முன்னால்கூட அப்படி திகைத்து நின்றதில்லை.

தேர்வு என்பது அத்தனை கடினமானதாக இருந்தது.

அத்தனை உணர்ச்சிகரமானதாக இருந்தது.

எதுவுமே அவ்வளவு முக்கியமல்ல என்று தோன்றிய கணத்தில் அவர்கள் தோள் அளவுக்கு தண்ணீர் வந்துவிட்டிருந்தது.

கடவுச்சீட்டுகளை எடுத்துக்கொண்டார்கள்.

வங்கிக் கணக்குப் புத்தகங்களை எடுத்துக் கொண்டார்கள்.

சான்றிதழ்ககளை எடுத்துக் கொண்டார்கள்.

ஆயுள் காப்பீட்டுப் பத்திரங்களை எடுத்துக்கொண்டார்கள்.

ரேஷன் கார்டுகளை,வாக்காளர் அட்டைகளை, ஆதார் அட்டைகளை, வாகனங்களை கைவிட்டு ஓட்டுனர் உரிமங்களை, கடன் பத்திரங்களை இன்னும் என்னென்னவோ!

முத்திரையிடப்பட்ட காகிதங்களை, ஆவணங்களைத் தவிர நம் வாழ்வை மீண்டும் நீட்டிக்கச் செய்வதற்கு வேறு எதுவுமே முக்கியமல்ல என்பது அவர்களை ஒரு கணம் அதிர்ச்சியடைய வைத்தது.

பிறகு வீடுகளை அப்படியே திறந்து போட்டு விட்டு ஒரு பாலீத்தின் கவரை தலைக்கு மேலாக தூக்கிப் பிடித்தபடி மேட்டு நிலம் நோக்கி தண்ணீரில் வேக வேகமாக நடந்து சென்றார்கள்...

வாழ்க்கையே இவ்ளோதான்... இதிலே, நான்தான் உத்தமன்... நான்தான் உயர்ந்தவன்... என் தலைவர்தான் நல்லவரு வல்லவரு (?)... என் மதமும், ஜாதியும் தான் ஒசந்த ஜாதி,... என் சாமிதான் ஒசந்தது... இது என்னோட இடம்... நான்தான் பணக்காரன்... இப்படி எத்தனை பாகுபாடுகள்.... "கடைசி"யா இதுல ஏதாச்சும் கைகுடுத்துச்சா...???.கை கொடுக்குமா...???

சிந்திப்போம்...


இதுதான் வாழ்க்கை! இவ்வுலகில் நீங்களோ, நானோ எதை விட்டுச் செல்ல போகிறோம்...???



நாளைக்கு எதை இங்கிருந்து எடுத்துச் செல்ல போகிறோம்...??? இருக்கும் வாழ்க்கையில், பிறர் மனம் நோகாமல் நல்லவைகளை பேசி, முடிந்தவரை பிறருக்கு உதவி செய்து... எவருக்கும் தீங்கிழைக்காமல் வாழ்வோம்...!!!

**- நாராயணசாமி**



**க**டந்த அக்டோபர் மாதம் 26ஆம் தேதி சென்னை மாநகராட்சி அலுவலர்கள் நமது கே ஆர் எம் அலுவலகத்துக்கு வந்தார்கள். தமிழக அரசு சார்பில் சிறப்பாக செயல்படுத்தப்படும் "நமக்கு நாமே" திட்டத்தில் கொளத்தூர் பகுதியில் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை தொழிலதிபர்களின் பங்களிப்புடன் செய்ய வேண்டிய பணிகள் குறித்து தகவல்களை பரிமாறிக் கொண்டார்கள். அந்த வகையில் கே.ஆர்.எம்.நிறுவனத்தின் சார்பில் அந்த திட்டத்தில் நமது பங்களிப்பை உறுதி செய்தோம்.

சென்னை மாநகராட்சியின் ஆணையர் சார்பில் 3வது மண்டலம்,26வது வார்டு செயற்பொறியாளர் திருமதி.ஜெயலட்சுமி,உதவி செயற்பொறியாளர் திரு சி.தனசேகர்,மற்றும் அலுவலர்கள் வந்திருந்தனர்.

பொதுமக்களுக்கு பலனளிக்கும் இந்த திட்டத்திற்கு கே.ஆர்.எம்.குழுமத்தின் சார்பில் நம்முடைய பங்கும் இருக்கிறது என்பதை உறுதிசெய்ததில் அளவில்லாத மகிழ்ச்சியும் மக்கள் பணியில் நம்மையும் இணைத்துக் கொள்வதில் பெருமையும் கொள்கிறோம்.

*******

சித்தர்கள் தங்கள் சித்தத்தின் மூலம் பெற்ற அறிவைக் கொண்டு மனித குலத்தினர் நோயின்றி வாழ வழிவகுத்த முறையே சித்த மருத்துவம் ஆகும் சித்த மருத்துவத்தின் மகத்துவத்தை மக்கள் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும் வேண்டும் இதுகுறித்து அவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனும் மருத்துவர் சண்முகம் பாரம்பரிய சித்த மருத்துவ அறிவியல் பயிலகம் ஒன்றை சென்னை அமைந்தகரையில் அமைத்துள்ளனர். இந்த உலகத்தில் முதல்வரும்







சித்த மருத்துவத்தில் சிறந்த பயிற்சியாளருமான திரு ராஜேந்திரன் அவர்கள் சிறப்பான முறையில் பயிலகத்தை வழிநடத்தி வருகிறார்.

சமீபத்தில் இந்தப் பயிலகத்தின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்குமாறு பங்கேற்று தலைமை தாங்கி விருதுகள் வழங்கும் என்னுடைய நீண்ட கால நண்பரும் பயிலகத்தின் முதல்வருமான ராஜா என்கிற திரு. ராஜேந்திரன் அவர்கள் அழைத்தார்.

நிகழ்ச்சி நம்முடைய KRவில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சியில் சித்த மருத்துவத்தில் சிறப்பான சேவை செய்து வரும் செங்குன்றம் திரு சண்முகம்.R.S.M.P., கொடுங்கையூர் திரு.மா. மரகதமணி ஆகியோருக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன விழாவில் சிறப்பு விருந்தினராக அன்னம்மாள் கல்வி அறக்கட்டளை இயக்குனர் திரு எஸ் குமாரசாமி மூலிகை பூங்கா நல







நண்பர்கள் சங்க துணைச் செயலாளர் திரு சுப்பிரமணி (வருமானவரித்துறை) துணைத்தலைவர் திரு.மோகன் ராஜ் ஆகியோர் பங்கேற்றனர் விழா நிறைவாக மூலிகை பூங்கா கணேசன் நன்றி கூறினார்.

ஒரு சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற பெரும் மனநிறைவு எனக்கு கிடைத்தது.

*******

தி.நகர் சோஷியல் கிளப் செகரட்டரியாக தேர்வு செய்யப்பட்ட செய்தியை நம்மிடம் பகிர்ந்து கொண்ட செய்தி இது.

We are happy to share that our entire team of Perfect Panel has secured a sweeping victory in the election.

This sweeping victories for the Perfect Panel was made possible by the support of all esteemed members.

While we thank the members who voted for us, we rededicate ourselves in the service of the club and pledge to work in such a manner, even those who did not vote for us will realize and change their mind.

My Hearty Thanks to all esteemed members for having their trust in me and my "PERFECT PANEL"

Our team assures continued positive developments of our club.

Stay safe, stay healthy

In true service Sinora Ashok &

'' PERFECT PANEL " Team "TNSC family"

எதைச் செய்தாலும் அதைச் சிறப்பாக செய்து முத்திரை பதிக்கும் திரு.அசோக் தொடர்ந்து வெற்றிகளைப் பெற மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துகிறோம்.

***அடுத்த மாதம் சந்திப்போம்!***

# திருவண்ணா“மலை” தரிசனம்:
# மலைக்க வைக்கும் விருந்தினர் இல்லம்!

**ஆ**ன்மிகத்திலும் வரலாற்றிலும் புகழ்பெற்ற இடமாக திகழ்கிறது திருவண்ணாமலை. பஞ்சபூத்தலங்களில் ஒன்றாகவும் சைவக்குரவர்களால் பாடல் பெற்றத்தலமாகவும் சிறப்புபெற்ற திருக்கோயில். இங்குள்ள அண்ணாமலையார் கோயில் சுமார் 1100 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு தொடர்ந்து சோழர்கள், பாண்டியர்கள், சம்புவராயர்கள், போசளர்கள், விஜயநகர அரசர்கள், நாயக்க மன்னர்கள், நகரத்தார்கள், குறுநில மன்னர்கள், ஜமின்தார்கள் என பல்வேறு அரசர்களின் பங்களிப்பு இக்கோயில் கட்டடக்கலை வரலாற்றில் உள்ளன. இக்கோயிலில் ஆயிரக்கணக்கான சிற்பங்களும், 450 கல்வெட்டுகளும் உள்ளன. இக்கோயிலில் 100 க்கும் மேற்பட்ட சந்நிதிகள் உள்ளன. இறைஉருவங்கள், செப்புத்திருமேனிகள், ஓவியங்கள், அழகிய திருச்சுற்றுகள், தீர்த்தக்குளங்கள், ஆயிரக்கால் மண்டபம், வானுயர்ந்த கோபுரங்கள் இக்கோயிலின் சிறப்புகள் ஆகும். 25 ஏக்கர் பரப்பளவில் மிகப்பிரமாண்டமாய் அமைந்துள்ளது இத்திருக்கோயில். கிருஷ்ணதேவராயர் கட்டிய கிழக்கு ராஜகோபுரம் 217 அடி உயரம், தமிழ்நாட்டில் இரண்டாவது உயரமான கோபுரம் ஆகும். இவை தவிர வல்லாள மகாராஜா கோபுரம், கிளிக்கோபுரம் ஆகியன சரித்திரம், அம்மனிஅம்மன் கோபுரம் ஆகியன முக்கியத்துவம் வாய்ந்த கோபுரங்களாகும். இக்கோயிலில் அருள்மிகு அண்ணாமலையார் உடனமர் உண்ணாமுலை மூலவராக அமைந்துள்ளனர். மலைவலப்பாதையில் அமைந்துள்ள எழுத்து மண்டபம் ஓவிய கூடமாக திகழ்கிறது. இவை தவிர கந்தாஸ்ரமம், பவழக்குன்று, ரமணாஸ்ரமம், கிரிவலப்பாதை, அஷ்டலிங்கங்கள் பார்க்கத்தகுந்த இடங்களாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மலைவலப்பாதையை தரிசனம் செய்ய வரும் ஆன்மீக அன்பர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி sunshine விருந்தினர் அமைந்திருப்பதுதான்.

### சன்ஷைன் கெஸ்ட் ஹவுஸ் சிறப்புகள்

* கார் நிறுத்தும் இடத்தில் இருந்தே மலையை தரிசிக்கலாம்/
* சுற்றியுள்ள மலைகளில் வாழும் சித்தர்களின் ஆசி கிடைக்கும் உணர்வு உள்ளத்தில் எழுகிறது.
* இந்த கெஸ்ட் அவுசின் இரண்டாம் தளம் யோகா செய்யும் வகைகளுக்கு ஏற்ப அமைந்துள்ளது.
* யோகா செய்யும் போது கைகளை உயர்த்தி பிடிக்கும் போது அந்த அண்ணாமலையே ஆசி வழங்குவதாக அமைந்துள்ளது.
* யோகா செய்யும் போது மலையிலிந்து வீசும் காற்று மனதுக்கு இதமளிக்கிறது.
* தங்கும் அறைகள் எளிமையாகவும்,பாரம்பரியத்தை போற்றும் வகையிலும் அமைந்துள்ளது.


வாங்க! வந்து தங்குங்க!!

**சிவனருளும்,சித்தர்களின் ஆசியும் பெற அழைக்கிறார் திரு.சிவகுமார்.**

தொடர்புக்கு:98840 23670









# உடல் எடையை குறைப்பது

# அளவான உணவா? ஆரோக்கியமான உறவா?

கரோனாவிலிருந்து மெல்ல மீண்டு வரும் சூழலில், மனித இனத்தைப் பாதிக்கும் பெரும் பிரச்சினையாக உடல் பருமன் உருவெடுத்துவருகிறது. இதற்காகப் பலரும் 'டயட்'டில் இருப்பதாகக் கேள்விப்பட்டிருப்போம். பருமனைக் குறைக்க டயட் கைகொடுக்குமா அல்லது டயட் ஆபத்தில் கொண்டுபோய்விடுமா?

உடல் எடை குறைப்பு முயற்சிகளும் சமச்சீர் உணவு (Diet) முறைகளும் இன்று நேற்று தொடங்கியவை அல்ல. பண்டைய கிரேக்கத்திலேயே அவை இருந்துள்ளன. உலகின் முதல் திரவச் சீருணவு முறையை பொ.ஆ. 1066இல் இங்கிலாந்து அரசர் வில்லியம் கடைப்பிடித்திருக்கிறார்.

1500களில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்குப் பின்னர் மேற்கத்திய உலகில், ஒல்லியான தேகத்தின் மீதான மோகமும் அதற்கான முயற்சிகளும் அதிகரித்தன. அந்தக் காலகட்டத்தில் பெரும்பாலான மக்கள் பஞ்சத்தில் சிக்கி மடிந்ததால், அதிக உடல் எடையுடன் இருப்பது சமூகக் குற்றம் என்று கருதும் போக்கும் இருந்துள்ளது. ஒல்லியான தேகத்தை விரும்பிய பெண்கள் சமச்சீர் உணவு முறைக்குப் பதிலாக இறுக்கமான கச்சைகளை மார்பிலிருந்து இடுப்புவரை அணிந்துள்ளனர். சிலர் தங்களின் கச்சைகளைச் சருமத்துடன் இணைத்துத் தைத்தும் உள்ளனர். இதனால் ஏற்பட்ட தொற்றால் பல உயிரிழப்புகளும் நிகழ்ந் துள்ளன. இறுக்கமான உள்ளாடைகளை அணியும் போக்கு இன்றும் தொடர்கிறது.

உலகின் முதல் சீருணவுப் புத்தகம் 1558இல் வெளிவந்தது. இன்றும் அது விற்பனையில் உள்ளது. லூய்கி கார்னாரோ எனும் இத்தாலியர் எழுதிய 'நீண்ட காலம் வாழும் கலை' எனும் அந்தப் புத்தகம், உடல் எடை குறைப்புக்கு 12 அவுன்ஸ் உணவையும் 14 அவுன்ஸ் மதுவையும் பரிந்துரைக்கிறது. அந்தச் சீருணவுத் திட்டத்தைக் கடைப்பிடித்த கார்னாரோ கிட்டத்தட்ட 100 ஆண்டுகள் வாழ்ந்தி ருக்கிறார்.அவருடைய வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில், முட்டையின் மஞ்சள் கருவை மட்டுமே சாப்பிட்டிருக்கிறார்.

1614இல் ஜியாகோமோ காஸ்டெல் வெட்ரோ இன்றும் விற்பனையில் உள்ள 'இத்தாலியின் பழங்கள், மூலிகைகள், காய்கறிகள்' எனும் புத்தகத்தை வெளி யிட்டார். அதில் ஆங்கிலேயர்களைப் போன்று அதிக இறைச்சி, சர்க்கரை ஆகியவற்றைத் தவிர்த்து, நிறையக் காய்கறி களை உண்ணும் இத்தாலிய முறைக்குத் திரும்ப வேண்டும் என்று வலியுறுத்தினார். இன்று பிரபலமாக இருக்கும் 'மத்திய தரைக்கடல் சீருணவு' திட்டத்துக்கு இந்தப் புத்தகமே முன்னோடி.

1730ஆம் ஆண்டில் டாக்டர் ஜார்ஜ் செயின் எழுதிய 'உடல் நோய்களைக் குணப்படுத்தும் இயற்கை முறை' எனும் சீருணவுப் புத்தகம் வெளியானது. டாக்டர் செயின், உடல் பருமனுடன் இருந்தார். பால், காய்கறிகள் ஆகியவற்றை மட்டும் உட்கொண்டு உடல் எடையை அவர் குறைத்தார். இந்த வகை சீருணவு இன்றும் பின்பற்றப்படுகிறது.

சீருணவு குறித்த முக்கியமான புத்தகமாகக் கருதப்படும் 'லெட்டர் ஆஃப் கார்புலென்ஸ் (உடல்நலக் கடிதம்)' 1864ஆம் ஆண்டில் வெளியானது. 'மனிதக் குலத்தைப் பாதிக்கும் அபாயகரமான ஒட்டுண்ணிகளையும் கிருமிகளையும்விட அதிக துயரமானது உடல் பருமன்' என்று அதன் ஆசிரியர் வில்லியம் பேண்டிங் அந்தப் புத்தகத்தைத் தொடங்கும் அளவுக்கு அன்று உடல் பருமன் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இருந்துள்ளது. அதிக எடைகொண்ட பேண்டிங், தன் உணவுப் பட்டியலிலிருந்து ரொட்டி, சர்க்கரை, உருளைக்கிழங்கு ஆகியவற்றை நீக்கி இறைச்சி, மீன், காய்கறிகள் ஆகியவற்றைச் சேர்த்ததன் காரணமாகத் தன்னுடைய எடைகுறைப்பு வெற்றிகரமானதை அந்தப் புத்தகத்தில் பதிவுசெய்திருந்தார். இன்று பிரபலமாக இருக்கும் பேலியோ, கீட்டோ போன்றபிரபலமாக இருக்கும் பேலியோ, கீட்டோ போன்ற சீருணவுத் திட்டங்களுக்கு இந்தப் புத்தகமே அடிப்படை.

1820களில் உலகின் கவர்ச்சியான மனித ராகக் கருதப்பட்ட கவிஞர் பைரன், உடல் எடை குறைக்கும்







நோக்கில் வினிகர் சீருணவுத் திட்டத்தைக் கண்டுபிடித்தார். உடலில் தேங்கியிருக்கும் கொழுப்பைக் கரைக்க ஒரு நாளில் பல முறை வினிகரைத் தண்ணீரில் கலந்து குடித்தார். வினிகரில் ஊறவைத்த உருளைக்கிழங்கையும் சாப்பிட்டார். பெண்கள் பலர் தங்கள் நாயகனான பைரனைப் பின்பற்றி வினிகர் குடித்து இறந்ததாகப் பதிவுகள் இருக்கின்றன. இன்று நடைமுறையில் இருக்கும் ஆப்பிள் சிடார் வினிகர் சீருணவுத் திட்டத்துக்கு பைரனின் சீருணவுத் திட்டமே முன்னோடி.

முதல் உலகப் போருக்குப் பிந்தைய காலகட்டத்தில், ஒல்லியான தேகத்துடன் இருப்பதே சிறந்த உடல் வடிவம் என்று கருதப்பட்டதால், அனைவரும் ஒல்லியாக இருப்பதை விரும்பத் தொடங்கினர். கொழுப்பைக் கரைக்கும் மசாஜ், வியர்வைக் குளியல், எடை குறைப்பு மாத்திரைகள், எடை குறைப்புக்கு உதவும் சூயிங்கம் போன்றவற்றை நோக்கி மக்கள் படையெடுத்தனர். அப்போது விற்கப்பட்ட சில மாத்திரைகளும் மிட்டாய்களும் ஆபத்தான அயோடின், ஆர்சனிக் உள்ளிட்ட நஞ்சு களைக் கொண்டிருந்தன.

இது போதாது என்று, புகைப்பது உடல் எடையைக் குறைக்கும் என்று 1920களில் விளம்பரப்படுத்தப்பட்டது. அந்தக் கால கட்டத்தில் நாடாப்புழு சீருணவு முறையும் பிரபலமாக இருந்தது. வயிற்றில் வாழும் அந்தப் புழு மனிதர்கள் உண்ணும் உணவை உட்கொள்ளும், அதன் காரணமாக உடல் எடை குறையும் என்பது அந்த முறையின் நம்பிக்கை.

இன்று பல சீருணவு முறைகள் பயன்பாட்டில் உள்ளன. உடல் எடை குறைப்பும் சீருணவு முறைகளும் (டயட்) இன்று பெரும் வணிகமாக வளர்ந்து நிற்கின்றன. உலகெங்கும் இதற்காகப் பல்லாயிரம் கோடி ரூபாயை மக்கள் செலவிடுகிறார்கள். உடல் எடை குறைப்பு நிலையங்கள் இல்லாத கிராமங்கள்கூட இல்லை என்பதே தற்போதைய யதார்த்த நிலை. இன்றைய சமூகத்தின் பொதுப்புத்தியும் எண்ண ஓட்டமும், உடல் பருமனை அவலமாகவும் எள்ளலுக்கு உரியதாகவும் மாற்றியுள்ளதால், அதிக எடைகொண்டவர்கள் குற்ற உணர்வுக்கும் அவமானத்துக்கும் உள்ளாகித் தங்கள் உடலை வெறுக்கத் தொடங்கு கிறார்கள். இந்தச் சுய வெறுப்பே உடல் எடை குறைப்பு வணிகத்தின் மூலதனம். அறிவியல் அடிப்படையில் அல்லாமல், இந்த மூலதனத்தின் மேல் கட்டியெழுப்பட்ட இந்த வணிகம், தங்கள் பொருட்களைப் பயன்படுத்தினால், தங்கள் சீருணவு முறைகளைப் பின்பற்றினால் ஒல்லியான தேகத்தைப் பெற முடியும் என்று ஆசை வலை விரிக்கிறது. உடல் பருமன் பிரச்சினையால் பாதிக்கப்பட்டோர் இந்த வலையில் எளிதில் சிக்கிக்கொள்கின்றனர்.

உடல் எடை குறைப்பு உடல் ஆரோக்கியத்தை மீட்டெடுக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இருப்பினும், பயன்பாட்டில் இருக்கும் அனைத்து சீருணவு முறைகளும் உடல் எடை குறைப்புக்கு உதவுகின்றன என்று கூற முடியாது. சீருணவு முறைகளால் உடல் எடை குறைந்தவர்களில் 97 சதவீதத்தினர் அடுத்த மூன்றாண்டுகளில் தாங்கள் இழந்த எடையை மீண்டும் பெற்றுவிடுகின்றனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சீருணவுகள் எடை குறைப்புக்கோ எடையைப் பராமரிக்கவோ உதவக்கூடும். நன்மை பயக்கும் ஆரோக்கிய விளைவுகள் சிலவற்றையும் அவை கொண்டிருக்கக்கூடும்.

இருப்பினும், சீருணவுகளின் நீண்டகாலப் பயன்பாட்டினால் நேரும் சீர்கேடுகளின் ஆபத்துகளை நாம் புறந்தள்ளிவிட முடியாது. சீருணவுமுறைகள் குறித்தும் அவற்றின் பாதிப்புகள் குறித்தும் வலுத்து ஒலிக்கும் அபாயக் குரல்கள் உணர்த்தும் சேதி இது. போதுமான உடற்பயிற்சியுடன், நிறையப் பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை உள்ள டக்கிய சீரான, ஆரோக்கியமான உணவை உட்கொள்வதன் மூலம், ஆரோக்கிய நன்மைகளை ஒருவர் பெற முடியும். சீருணவுக்குப் பதிலாக நம் முன்னோர் பின்பற்றிய வழியும் அதுவே....



எஸ்.ஜானகி

# கன்னட நடிகர் மரணமும் கவலை தரும் செய்திகளும்!



புனித் ராஜ்குமாரை 'கன்னடத்தின் விஜய் ' எனலாம். கிட்டத்தட்ட இருவருக்கும் ஒரே வயது. 'பவர் ஸ்டார்' என்பது தமிழ்நாட்டில் கொஞ்சம் காமெடியான பட்டம். அங்கே கர்நாடகாவில் பவர் ஃபுல்லான பட்டம். ஒட்டுமொத்த மாநிலமே 'அப்பு' என்று செல்லமாக அழைக்கும் பாசக் குழந்தை அவர்.

46 வயதில் அவரது மரணம் பல்வேறு விஷயங்களை நம்மை யோசிக்க வைத்து இருக்கிறது. எந்த நேரத்திலும் மரணம் வந்து 'நலமா, என் பழைய நண்பனே!' என்று நம் கதவைத் தட்டக் கூடும் என்பதை இந்த மரணம் மீண்டும் நிரூபித்து இருக்கிறது. 'நேற்று இருந்தவன் இன்று இல்லை என்னும் பெருமையை இந்த உலகம் தன்வசம் வைத்துள்ளது' என்னும் வள்ளுவப் பாட்டனின் வாய்மொழியும் நிரூபணம் ஆகி இருக்கிறது. நேற்று இரவு 12 மணி வரையிலும் பார்ட்டி பார்ட்டி ஒன்றில் கலந்து கொண்டு ஜாலியாக, உற்சாகமாக சிரித்துக்கொண்டே நடனமாடிக் கொண்டு இருந்திருக்கிறார் புனித். இன்று காலை எழுந்து வழக்கம் போல ஜிம்மில் உடற்பயிற்சிகள் செய்திருக்கிறார். உடனடி Cardiac arrest ஏற்பட்டு சில நிமிடங்களில் மரணம். பிரிந்து பல காத தூரம் கடந்து சென்று விட்ட உயிரை மீண்டும் உடலில் ஒட்ட வைக்க முடியாதா என்று போராடி இருக்கிறது மருத்துவமனை. நண்பகல் 12 மணியளவில் கை விரித்து மரண அறிவிப்புச் செய்து இருக்கிறார்கள். எந்த வித முன்னறிவிப்பும் தராமல் 'இனிமேல் துடிக்க மாட்டேன்' என்று இதயம் திடீரென ஸ்ட்ரைக் செய்து ஏனோ நின்று போய் விடுகிறது. massive cardiac attack. இதற்கான சரியான காரணங்கள் இன்னும் வரையறுக்கப் படவில்லை என்றே தெரிகிறது. சும்மா நம் ஆறுதலுக்காக 'unhealthy lifestyle' என்றெல்லாம் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் இறுதி நிமிடம் வரை புனித் 'fit as fiddle' ஆகத் தான் இருந்திருக்கிறார். வாடகை வீட்டில் இருப்பவர் குறைந்தது ஒரு மாதம் முன்பாக 'நான் காலி செய்யப் போகிறேன்' என்று ஓனருக்கு நோட்டீஸ் தரவேண்டும் என்பார்கள். உடம்பென்னும் வாடகை வீட்டில் தங்கி இருக்கும் உயிர் அப்படி எந்த நோட்டீசும் தருவதில்லை. 'Interval' கார்டை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கையில் 'The End' கார்டு காட்டிப் பாதியில் அபத்தமாக நின்றுவிடும் ஒரு சுவாரஸ்யத் திரைப்படம் போல திடீரென்று விலகி விடுகிறது உயிர்!

இது தத்துவமோ வேதாந்தமோ, எதிர்மறை உணர்ச்சிப் பிரச்சாரமோ அல்ல. இதில் positive ஆகச் சிந்திக்கவும் சில விஷயங்கள் உள்ளன. ஆயிரம் வருடங்கள் இங்கே இருப்பது போல வாழ்ந்து கொண்டிருக்கிறோம், அத்தனை சுயநலத்தோடு, அத்தனை பகைமையோடு, அத்தனை காழ்ப்புணர்ச்சிகளோடு! முதுகுக்குப் பின்னால் மரணத்தை வைத்துக்கொண்டு முப்பது ஆண்டுகளுக்குத் தேவையான திட்டங்களைப் போட்டுக் கொண்டு இருக்கிறோம். இந்த விஷயங்களைக் கொஞ்சம் யோசிப்போம்.

பகை, போட்டி, பொறாமை, பேராசை, ஈகோ இவை எல்லாம் தேவை இல்லாத baggage கள். எப்போது யார் போய்ச் சேருவார்கள் என்று தெரியாது. அப்புறம் 'ச்சே, நேத்து கூடப் பார்த்தேனே, பழசை எல்லாம் மறந்துட்டு கொஞ்சம் சிரிச்சுப் பேசி இருக்கலாமே' என்று அங்கலாய்ப்பதில் பொருள் இல்லை. நிகழ்காலத்தில் வாழ்வது. மேலே சொன்னது போல நாம் போடும் 'முப்பது வருடத் திட்டத்தைப்' பார்த்து மெல்லப் புன்னகைக்கிறது முதுகின் பின் ஒளிந்து கொண்டிருக்கும் நம் மரணம். தொலையாத கவலைகள். உலகின் பாரத்தை எல்லாம் நம் தோள் மீதி ஏற்றியது போலத் தூக்கிச் சுமக்கும் கவலைகள். 'செத்ததற்கு அப்புறம் என் குடும்பம் என்ன செய்யும்?' என்பது போன்ற கவலைகள். reality என்னவென்றால் 'they will be just fine!'. நம்மால் தான் எல்லாம் நடக்கிறது என்ற நினைப்பைத் தூரப் போடுவோம்.'அழவா இங்கே வந்தோம்? ஆடு பாடு ஆனந்தமா!' பொருட்களை நாம் உபயோகிக்கலாம். பொருட்கள் நம்மை உபயோகிக்கத் துவங்கும் புள்ளியை அறிந்து கொண்டு ஒரு கும்பிடு போட்டு விலகி நின்று விட வேண்டும். இந்த நிமிடம் மரணம் வந்து அழைக்கும் போது 'சரி, வா, போகலாம்' என்று உதறி விட்டுச் செல்லும் பக்குவம் வேண்டும்.

நிலையற்ற வாழ்வில் நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு நாளும் ஒரு மகத்தான பரிசு தான் என்று தோன்றுகிறது. 'இன்று நான் படுக்கையில் இருந்து எழுந்து விட்டேன், வரவிருக்கும் இந்த நாளுக்கு நன்றி' என்று எழுந்திருக்கும் போதும், 'இன்று ஒரு நாளை நான் கடத்தி விட்டேன், இன்றைய நாளுக்கு நன்றி' என்று இறைவனுக்கோ, பிரபஞ்சத்துக்கோ நன்றி சொல்லத் தெரிந்திருத்தல். ஒவ்வொரு தினத்தையும் வாழ்வின் கடைசித் தினம் போல வாழப் பழகிக் கொள்ளுதல். பகிர்ந்து கொள்ளுதல், உதவி செய்தல், தேவைப் படுபவர்களுக்குக் கரம் நீட்டுதல், உயிர்களிடத்தில் அன்பு. கடவுள் நம்பிக்கை. இது ஒருவிதத்தில் ஆத்திகர்களின் advantage. 'காலா, உன்னைக் காலால் எட்டி உதைப்பேன்' என்னும் தைரியத்தைத் தரும் நம்பிக்கை. 'அவன் பார்த்துக் கொள்வான், இம்மையிலும், மறுமையிலும் என்னைச் சரியான இடத்துக்கு அவன் கூட்டிச் செல்வான்' என்ற திட நம்பிக்கை. மரணமும் இவர்களுக்கு 'This is but a scratch'!!!

மரணத்தின் போது ஒரு நிமிடத்தில் நம் வாழ்க்கை முழுவதும் நம் கண் முன்பு ஒரு திரைப்படம் போல பிளாஷ் ஆகுமாம். அப்போது அந்தத் திரைப்படம் பார்ப்பதற்குச் சிறந்த ஒரு 'feel-good movie' யாக இருக்க வேண்டாமா? யோசிப்போம்!

- கே.கலியபெருமாள் (K.P)

# "ஆண்மகன்" அன்னை இந்திரா காந்தி:

## சொல்கிறார் செய்தி வாசிப்பாளர் சரோஜ் நாராயண் ஸ்வாமி



**தெ**ரியுமா இவரை ஆல் இண்டியா ரேடியோ... செய்திகள் வாசிப்பது சரோஜ் நாராயண் ஸ்வாமி.

TV காலத்துக்கு முந்தையவர், எங்களை போல. இன்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் இவரின் இன்முகம் காண்போமே .. !

வயது 85. இந்த உலகில் அழகால் அறியப்படுபவர்களுக்கு இணையாக குரலால் அறியப்பட்டு, அழியாப் புகழ் பெற்றவர்களும் இருக்கிறார்கள்.

இப்படி தமது குரலால் புகழ் பெற்றவர்களில் முக்கியமான ஒருவரைத் தேடி கண்டடைந்தோம்.

அவர்தான் அகில இந்திய வானொலியின் முன்னாள் செய்தி வாசிப்பாளரான "கலைமாமணி' சரோஜ் நாராயண சுவாமி.

சென்ற தலைமுறை தமிழர்கள், தில்லியிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழ்ச் செய்திகளை இவரது கம்பீரமான குரலுக்காகவும், உச்சரிப்புக்காகவும் விரும்பிக் கேட்டிருக்கிறார்கள்.

இப்போது மும்பையில் வசிக்கும் சரோஜ் நாராயணசுவாமி இந்த 82 வயதிலும் முதுமையின் சுவடுகள் எதுவும் முகத்தில் தெரியாமலும், அதே கம்பீரமான குரலுடனும் பேசுகிறார்.

அவர் நம்மிடம் பகிர்ந்ததை கேளுங்கள்.

"என்னுடைய முன்னோர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள்.

ஆனால் நான் பிறந்து வளர்ந்து பி.ஏ. ஆங்கில இலக்கியம் படித்தது எல்லாம் மும்பையில்தான்.

எனக்கு மும்பை ஜென்மபூமி. தில்லி கர்மபூமி.

அதாவது நான் பிறந்தது மும்பை என்றாலும் சம்பாதித்து புகழ் பெற்றது எல்லாம் தில்லியில்.

நான் அகில இந்திய வானொலிக்கு வருவதற்கு முன்பு யூகோ வங்கியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன்.

இந்த வங்கியும் அகில இந்திய வானொலிக்கு அருகிலேயே இருந்தது. பின்னர் அகில இந்திய வானொலியில் தேர்வுகள் எழுதி பணிக்குச் சேர்ந்தேன்.

பல்வேறு மாநில மொழிகளில் வரும் செய்தி அறிக்கைகளில், நான் தமிழ்ச் செய்தி வாசிப்பாளரானேன்.

படிப்படியாக முன்னேறி, செய்திப் பிரிவில் உயர்ந்த பதவிகளை அடைந்தேன். செய்தி வாசிப்பில் உச்சரிப்பு என்பது ஆத்மாவைப் போன்றது. எனக்குக் கீழ் பணிபுரிபவர்களிடம் உச்சரிப்பை உற்றுக் கவனித்து தவறு இருந்தால் திருத்துவேன். செய்தி வாசிப்பாளருக்கு ஒரு மொழியியல் அறிஞரைப் போல மொழியைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வம் இருக்க வேண்டும்.

செய்தி வாசிப்பில் பிறநாட்டு வார்த்தைகள் வந்தால், அந்தநாட்டு தூதரகத்தையோ, கலாசார மையத்தையோ தொடர்பு கொண்டு அந்த வார்த்தைக்கு அர்த்தம் தெரிந்த பின்னர்தான் செய்தியில் பயன்படுத்துவேன். உச்சரிப்பில் தவறு வந்துவிடக்கூடாதே என்பதற்காகத் தான் இந்த முயற்சி.

செய்தி வாசிப்பாளர்க்கு ஆங்கிலம், ஹிந்தியிலிருந்து பிராந்திய மொழியில் மொழி பெயர்க்க வேண்டும்.

அதிகாலை 5.30க்கு செய்தி என்றால் 3.30க்கே மொழி பெயர்ப்பு செய்வதற்காக வந்துவிடுவேன். கடும் குளிரும், கடும் வெப்பமும் நிலவும் தில்லியில் எனது குரல் எந்தவிதத்திலும் பாதிக்காதது எனது அதிர்ஷ்டமே.

வானொலி நிலையத்திலுள்ள திரைப்பிரிவிலும் நான் வாய்ஸ் தந்துள்ளேன்.

மொரார்ஜிதேசாய், இந்திராகாந்தி, பி.வி.நரசிம்மராவ் போன்ற பாரத பிரதமர்கள், முன்னாள் குடியரசு தலைவர் ஆர்.வெங்கட்ராமனையும் நேர்காணல் செய்திருக்கிறேன். இந்திரா காந்தி என்னைக் கவர்ந்த பெண்மணி.



ஒரு பிரதம மந்திரியாக மட்டும் இல்லாமல் இந்திராவை ஒரு சகோதரி போல நினைத்தேன்.

அன்னை இந்திரா சுட்டுக் கொல்லப்பட்ட நாளன்று மாலை தகன நிகழ்ச்சிகளை, நான் மனதைக் கல்லாக்கிக் கொண்டு படித்தேன்.

அந்தக் காலத்தில் கேபினட்டில் இருந்த ஒரே “ஆண்மகன்’ அன்னை இந்திராகாந்தி என்பேன். முப்பத்தைந்து ஆண்டுகள் பணி நிறைவுக்குப் பின் செய்திப் பிரிவில் பணியாற்றினேன்.

எனது பிள்ளைகளின் அனைவரது அரவணைப்பிலும் அன்பிலும் மனநிம்மதியாக இருக்கிறேன். ஓய்வு நேரங்களில் டி.வி. பார்க்கிறேன். குறிப்பாக செய்தியைக் கவனிக்கிறேன்.

சில பேர் உச்சரிப்பில் தவறு செய்கிறார்கள். ழ, ல, ள, வித்தியாசம் பலருக்குத் தெரியாமல் இருப்பது வருத்தத்தை அளிக்கிறது.

தமிழ் தனியார் பண்பலைகளைக் கேட்டதில்லை. பேசத் தெரிந்தால் போதும், எதைவேண்டுமானாலும் பேசலாம் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். நம் நாட்டில் ரேடியோ ஒலிபரப்புக்கென்று ஒரு பாரம்பரியம் இருப்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனக்கு கடந்த 2008ம் ஆண்டு கலைமாமணி விருது, கலைஞர் கையால் கிடைத்தது.


நான் ஷீரடி சாய்பாபாவின் தீவிர பக்தை. நான் வாழ்வதும், உங்களுடன் பேசிக் கொண்டிருப்பதும் பாபா தந்த அருள்தான்.’




முகமறியா அன்பர்களுக்காக இப்புகைப் படம் பதிவு.

**– எம்.கிருஷ்ணன், தொழிலதிபர்**

# SECRET OF SUCCESS



எஸ்.சூர்யா




# பேஸ்புக் பெயர் மாற்றம்

பேஸ்புக்கின் பெயர் "மெட்டா" என்று மாற்றப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்துக்கான மெய்நிகர் உலகத்தை உருவாக்கவே மெட்டா முயற்சிக்கும் என்று ஃபேஸ்புக் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மார்க் ஜுகர்பெர்க் அறிவித்துள்ளார்.

பேஸ்புக் நிறுவனத்தின் பெயர் விரைவில் மாற்றப்பட உள்ளது. அதாவது ரீபிராண்ட் செய்யப்பட உள்ளதாகத் தகவல்கள் வெளியாகின.இந் நிலையில்பேஸ்புக் நிறுவனத்தின் மாநாட்டில் இதற்கான அறிவிப்பை ஜுகர்பெர்க் நேற்று வெளியிட்டார். அதேசமயம், பேஸ்புக் நிறுவனத்தின் செயலிகளின் பெயர்கள் மாற்றப்படாது. தற்போதிருக்கும் பெயரிலையே தொடர்ந்து இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேஸ்புக் நிறுவனத்தின் சார்பில் காணொலியில் நடந்த மாநாட்டில் தலைமை நிர்வாக அதிகாரி மார்க் ஜுகெர்ப்ர்க பேசியதாவது: ஃபேஸ்புக் நிறுவனத்தின் பெயர் ரீபிராண்ட் செய்யப்பட்டு, மெட்டா பிளாட்ஃபார்ம் என்று அழைக்கப்படும் அதாவது சுருக்கமாக மெட்டா என்று அழைக்கப்படும். அதிவேகமாக டிஜிட்டல் உலகத்தை உருவாக்குவதற்கான உறுதிப்பாட்டை மெட்டாவர்ஸ் உருவாக்கும். மெட்டா எனும் புதிய பெயர் சமூக ஊடக சேவையை விட மெட்டாவர்ஸில் முதலீடு செய்வதைதான் பிரதிபலிக்கிறது. நெருக்கமான தளங்களில் வாழ்ந்து, சமூகப் பிரச்சினைகளுடன் போராடி நாங்கள் நிறைய கற்றுக் கொண்டோம், இப்போது நாம் கற்றுக்கொண்ட அனைத்தையும் எடுத்து அடுத்த அத்தியாயத்தை உருவாக்கவும் உதவும் நேரம் வந்திருக்கிறது.




நம்முடைய நிறுவனம் மெட்டா என்று இன்றிலிருந்து அழைக்கப்படும் என்று பெருமையுடன் தெரிவிக்கிறேன்., மக்களை ஒன்றாக இணைத்தல் எனும் நம்முடைய இலக்குகள் ஒரே மாதிரியானவை தான். நம்முடைய நிறுவனத்தின் செயலிகள், அதன் பிராண்ட்களின் பெயர்கள் மாற்றம் செய்யப்படாது. பேஸ்புக் நிறுவனத்தை இன்று சமூக ஊடக நிறுவனமாக நாம் அனைவரும் பார்க்கிறோம். ஆனால், நம்முடைய டிஎன்ஏ என்பது, தொழில்நுட்பத்தை மேம்படுத்தி மக்களை இணைப்பதாகும். மெட்டாவெர்ஸ் என்பது மெய்நிகர் சூழல். அதற்குள் நீங்கள் சென்று வெறும் திரையைப் பார்ப்பதற்குப் பதிலாக மெய்நிகர் உபகரணங்களான ஹெட்மசெட், ரியாலிட்டி கிளாஸ், ஸ்மார்ட்ஃபோன் ஆப், உள்ளிட்ட பல உபகரணங்கள் மூலம் மக்களுடன் சந்திக்கலாம், உரையாடலாம், விளையாடலாம்.

அடுத்த 10 ஆண்டுகளில் மெட்டாவெர்ஸ் 100 கோடி மக்களைச் சென்றடையும். இதன் மூலம் லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என நம்புகிறேன். இவ்வாறு ஜுகர்பெர்க் தெரிவித்தார்.

அதேசமயத்தில் பேஸ்புக் செயலி தனது பெயரை மாற்றவில்லை, இன்ஸ்டாகிராம், வாட்ஸ்அப், மெசஞ்சர் ஆகியவற்றின் பெயர்களும் மாறவில்லை. டிசம்பர் 1 ம்தேதி முதல் புதிய டிக்கர் சிம்பளான எம்பிஆர்எஸ் என்ற எழுத்துடன் செயல்படத் தொடங்கும். மெட்டாவெர்ஸ் என்ற வார்த்தை கிரேக்க வார்த்தையிலிருந்து உருவானது. ஆங்கிலத்தில் (Beyond) என்ற வார்த்தையைக் குறிக்கும். கடந்த 1992ம் ஆண்டு நீல் ஸ்டீபென்சன் என்ற ஆங்கில எழுத்தாளர் தனது "ஸ்னோ கிராஷ்" நாவலில் மக்கள் அனைவரும் மெய்நிகர்(விர்ச்சுவல்) ஹெட்செட், கண்ணாடி போன்றவற்றை அணிந்து இணைந்திருத்தலையும், உரையாடுவதையும், விளையாடுவதையும் குறிப்பிட்டிருந்தார். அதாவது 1992ம் ஆண்டிலேயே டிஜிட்டல் உலகத்தை விரிவாக எழுதியிருந்தார். அதைத் தழுவியே மெட்டாவெர்ஸ் உருவாக்கப்பட்டுள்ளது.



– வைத்தியநாதன்

# திருவீழிமிழலை வீழிநாதேஸ்வரர்

- கலைமாமணி நடிகர் டாக்டர் பூவிலங்கு மோகன்



மகாவிஷ்ணுவின் சக்கராயுதத்தை சலந்தரன் என்ற அரக்கன் பறித்துச் சென்று விட்டான். அவர் பரமசிவனிடம், சக்ராயுதத்தை மீட்டுத்தர வேண்டினார். பூலோகத்தில் வீழிச்செடிகள்அடர்ந்த இடத்தில் தான் இருப்பதாகவும், அங்கு தினமும் பூஜை செய்தால் சக்ராயுதம் கிடைக்கும் என்றும் அருளினார். விஷ்ணுவும் இத்தலத்தில் தனது பெயரால் ஒரு தீர்த்தம் உண்டாக்கி, அதிலிருந்து சிவனுக்கு அபிஷேகம் செய்து ஆயிரம் தாமரை மலர்களால் ஈசனை வழிபாடு செய்து வந்தார். ஒருநாள் சிவனின் திருவிளையாடலால், சிவபூஜைக்கான ஆயிரம் தாமரையில் ஒன்று குறைந்தது. அந்த ஒரு தாமரைக்கு பதில் விஷ்ணு தன் கண்ணையே ஆயிரமாவது மலராக தந்தார். இதனால் தான் கோயில்களில் "கண்மலர்' காணிக்கை தரும் பழக்கம் உருவானது. இப்பூஜைக்கு மகிழ்ந்த சிவன், சலந்தரனை வதம் செய்து, சக்கராயுதத்தை கொடுத்தருளினார். விஷ்ணு சிவனுக்கு பூஜை செய்த கண்மலர் இன்றும் சிவனின் பாதத்தில் இருப்பதைக்காணலாம்.

இறைவர் திருப்பெயர் : வீழிநாதேஸ்வரர்,விழியழகர், நேத்திரார்ப்பணேசுவரர்,

இறைவியார் திருப்பெயர் : சுந்தரகுசாம்பிகை (அழகியமாமுலையம்மை),

தல மரம் :வீழிச்செடி,

தீர்த்தம் : வீஷ்ணுதீர்த்தம்

இங்கு சிவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார்.

திருமணத்தடை, குழந்தை பாக்கியம், கல்வியில் சிறந்து விளங்க இறைவனை பிரார்த்திக்கலாம்.

பார்வதி தேவி கார்த்தியாயினி ஆக மறு பிறவி எடுத்து சிவ பெருமானை இங்கு மணந்தாக வரலாறு.

சிவபெருமான் எமனைக் காலால் உதைத்து, இனி தன் பக்தர்கள் சிவபூஜையில் ஈடுபட்டிருக்கும் போது உயிரைப் பறிக்க வரக்கூடாது என்று ஆணையிட்டார். இத்தகைய சிறப்பு பெற்றது திருவீழிமிழலை திருத்தலம்.

மயிலாடுதுறை திருவாரூர் சாலை வழியில் பேரளம் வழியாக பூந்தோட்டம் வந்து அங்கிருந்து 10 கி.மி. தொலைவில் அரிசிலாற்றின் வடகரையில் இத்தலம் அமைந்துள்ளது. கும்பகோணத்தில் இருந்து பூந்தோட்டம் செல்லும் சாலையில் சென்று தென்கரை என்ற இடத்தில் இறங்கி 1 கி.மி. சென்றாலும் இத்தலத்தை அடையலாம்!





நண்பர் பன்முகக்கலைஞர்
திரு.சாய்ராம் அவர்களும், நானும்

## சூர்யாவை போற்றும் ரசிகர்கள்!




சூரரை போற்று படத்தின் வெற்றிக்கு பின்னர் நடிகர் சூர்யா நடிப்பில் வெளியாகி உள்ள படம் தான் ஜெய் பீம். சூர்யா முதல் முறையாக வக்கீலாக நடித்துள்ள இப்படம் இருளர் இனமக்களள் வெளிச்சத்திற்காக போராடும் கதைகளத்தை அடிப்படையாக கொண்டு உருவாகி உள்ளது. அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில் வெளியாகி உள்ள

ஒரு படத்திற்கு கதை எந்த அளவிற்கு முக்கியமோ அதைவிட கதாபாத்திர தேர்வு மிகவும் முக்கியம். அந்த வகையில் ஜெய் பீம் படத்தின் இயக்குனர் ஞானவேல் தேர்வு செய்துள்ள கதாபாத்திரங்கள் சிறப்பு.

இருளர் இன மக்களின் அறியாமையை சிலர் எப்படி தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி கொள்கிறார்கள் என்பதை இயக்குனர் ஞானவேல் மிகவும் அழுத்தமாகவும், உணர்ச்சிப்பூர்வமாகவும் வெளிப்படுத்தி இருப்பது படத்திற்கு மேலும் வலு சேர்த்துள்ளது.

எங்கள் சூர்யாவுக்கு இந்த படம் பெரிய திருப்புமுனையாக அமையும் என்று அவரது ரசிகர்கள் கொண்டாடுகிறார்கள்.

## அதிக படங்கள் வைத்திருக்கும் கீர்த்தி சுரேஷ்



தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக வலம் வரும் கீர்த்தி சுரேஷ், மறைந்த நடிகை சாவித்திரி வாழ்க்கை கதையான 'மகாநடி' படத்தில் நடித்ததன் மூலம் தேசிய விருது பெற்றார். தற்போது தமிழில் ரஜினியுடன் 'அண்ணாத்த', செல்வராகவனுடன் 'சாணிக்காயிதம்' ஆகிய படங்களில் நடித்து முடித்துள்ளார். இதில் அண்ணாத்த படம் தீபாவளிக்கு திரைக்கு வருகிறது.

இதுதவிர மலையாளத்தில் மோகன்லால் உடன் 'அரபிக்கடலின் சிங்கம்', தெலுங்கில் மகேஷ்பாபு உடன் 'சர்காரு வாரி பாட்டா', சிரஞ்சீவியுடன் 'போலா சங்கர்', நானிக்கு ஜோடியாக 'தசரா' போன்ற படங்களையும் கைவசம் வைத்துள்ளார்.

## தீபாவளிக் கொண்டாடிய வாணி போஜன்

நடிகைகளில் தொலைக்காட்சியில் அறிமுகமாகி பெரிய திரையில் பரபரப்பாக இருப்பவர்களில் முக்கியமானவர் வாணி போஜன். இவர் இளம் கதாநாயகர்களுடன் அதிக படங்களில் ஒப்பந்தமாக்கியிருக்கிறார். சமீபத்தில் சென்னையில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளை ஒன்று திரட்டி நடத்தப்பட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்ட குழந்தைகளுடன் தீபாவளி கொண்டாடினார். நிகழ்வில் நடிகை வாணி போஜன் பேசியபோது, "இன்று இந்த குழந்தைகளுடன் கொண்டாடிய தீபாவளி என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாகும். இந்த தீபாவளியை இது போல் ஆதரவற்றவர்களுடன் எல்லோரும் கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.





மிமிக்ரியில் கலக்கும் நடிகர் சிவகார்த்திகேயன் திரைப்படங்களில் பாடியும் வருகிறார். இவர் பாடிய பாடல்கள் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.



# சின்னத்திரையில் எனது வெற்றிப்பயணம்:

### -‘‘கயல்’’இயக்குனர் செல்வம் சொல்கிறார்








என் பெயர் செல்வம். விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ராஜபாளையம் அருகில் உள்ள சேத்தூர்தான் எனது சொந்த ஊர். எனது பெற்றோருக்கு மூன்று பிள்ளைகள். நான்தான் கடைசி. கடைசி என்றாலே செல்லம் அதிகமாக இருக்கும். அதற்கு தகுந்தாற்போலவே எனது பெயர் செல்வமாக அமைந்தது.

அதே ஊரில் 12ம் வகுப்பு வரை முடித்து கம்ப்யூட்டர் டிப்ளமோ சேர்ந்தேன். அவ்வளவாக படிப்பில் நாட்டமில்லை. அந்த சமயத்தில் பள்ளியில் நடக்கின்ற அனைத்து போட்டிகளிலும் ஆர்வம் அதிகம். நான் பெயர் கொடுக்கிறேனோ இல்லையோ எனது ஆசியர்கள் என் பெயரை கொடுத்து விடுவார்கள். அவர்களது நம்பிக்கையை நான் பொய்யாக்கியதில்லை. அதில் எனக்கு கவுரவமும், சந்தோஷமும் கிடைத்து. அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்று பள்ளிக்கு பெருமை வாங்கி கொடுத்திருக்கிறேன். பள்ளியில் நடக்கும் போட்டியாக இருந்தது மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கலந்து கொண்டு பள்ளிக்கு பெருமைதேடி தந்தேன். பள்ளியில் எனது பெயரை சொன்னாலே கொண்டாட்டமாக இருக்கும். சொன்னப்போனால் பள்ளியின் முதல்வர் என் பெயரை வைத்து கவிதை எழுதி என்னை பெருமைப்படுத்தினார்.

ஒவ்வொரு போட்டியிலும் கலந்து கொண்டு விருதுநகர் மாவட்டத்தின் ஆட்சியரின் கரங்களால் தங்கம் மற்றும் வெள்ளி பதங்களாக ஏழு பதங்கள் வாங்கினேன். அதை இப்பவும் ஒரு பொக்கிஷமாக பாதுகாத்து வருகிறேன்.

அந்த கலை, இலக்கியத்தின் ஆர்வம்தான் எனக்கு சினிமா மீது காதலாக மாறியது. அதற்கேற்றாற்போல் சென்னையில் எனது மாமா நாராயணன் அவர்கள் சுந்தர்.கே. விஜயன் அவர்களின் பணியாற்றிக் கொண்டிருந்தார். என்னுடைய பெரிய சக்தி அண்ணன் இயக்குனர் சமுத்திரக்கனி முதல் படம் எடுத்துக் கொண்டிருந்த நேரம். இவர்கள் இருவரும் இருப்பதால் சினிமா மீது எனக்கிருந்த நம்பிக்கை அதிகமானது. எனது பெற்றோரிடம் சென்னைக்கு சினிமாவுக்கு நடிப்பு வாய்ப்பு தேடி போகிறேன் என்று கூறினேன்.

அப்பா – அம்மா படித்து முடித்து வேலைக்கு போய் குடும்பத்தை பார்த்துக் கொள்வேன் என்று நினைத்திருந்தனர். ஆனால் எனது கனவை நான் சொன்னவுடன் சம்மதம் தெரிவித்தனர்.

கையில் பணமில்லாமல் வாரக்கடன் வாங்கி என் அப்பா சென்னையில் கொண்டு வந்து விட்டு நம்பிக்கையூட்டிச் சென்றார். சென்னை வந்தவுடன் இயக்குநர் சமுத்திரக்கனி அண்ணாவின் அறைக்கு சென்றேன். அவர் கேட்டார் “என்னடா.... சொல்லாமல் கொள்ளாமல் வந்துட்ட?” என்றார்.

நான் வாங்கிய அனைத்து பரிசுகளையும், சான்றிதழ்களையும் காட்டி நடிக்கணும்னு வந்தேன் என்று கூறினேன்.

சினிமாவில் அவருடைய கருத்துக்கள் உண்மையாக இருக்கிறதோ அதே போல் நிஜ வாழ்க்கையிலும் இருக்கக்கூடியவர். “நீ வாங்கிய சான்றிதழ்களும், பரிசுகளையும் வைத்துக் கொண்டு சினிமாவுக்கு பயன்படுமா என்று தெரியலை. இது வேறு உலகம். இதற்கான உழைப்பு வேறு. சரி வா. நம்பிக்கையோட வந்துட்ட. உண்மையான உழைப்பை போடு.... நடிப்பு மட்டும் இல்லை. இந்த துறையில் எவ்வளவோ விஷயங்கள் இருக்கிறது. உனக்கு என்ன வரும் என்று முயற்சித்து முடிவெடு” என்று கூறிவிட்டு படப்பிடிப்பிற்கு சென்று விட்டார்.







2002ல் சுந்தர்.கே.விஜயன் அவர்கள்தான் சின்னத்திரையில் மிகப்பிரபலமான இயக்குநர். சமுத்திரக்கனி அண்ணாவுக்கும் அவர்தான் குருநாதர். நான் தினமும் அவரை போய் பார்த்துக் கொண்டு வருவேன். தினமும் சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்று இயக்குநர் வீட்டின் அருகே உள்ள மருந்தகத்தில் டெலிவரி பாயாக வேலைக்கு சேர்ந்தேன்.

திடீரென்று ஒரு நாள் "என்னடா இவன் தினமும் வந்து போகிறான். கனியோட தம்பியா இருக்கான். நாராயணனோட சொந்தக்காரனா இருக்கான். சரி வா...." என்னை வேலைக்கு அழைத்துக் கொண்டார். சினிமாவில் பாதியளவு சாதித்ததுபோல் இருந்தது. அவர் சாதாரண மனிதர் அல்ல. பழம்பெரும் இயக்குநர் கே.விஜயன் அவர்களின் மகன். இவ்வளவு பெரிய இயக்குநரிடம் வேலை கிடைத்தது சந்தோஷமாக இருந்தது.

அவரிடம் ஏழெட்டு வருடங்கள் வேலை செய்தேன். நிறைய நாடகங்களில் அசிஸ்டெண்ட்டாக வேலை செய்தேன். எவ்வளவு பெரிய ஆர்ட்டிஸ்ட்டாக இருந்தாலும் சகஜமாக வேலை செய்யும் பக்குவம் வந்தது. அனைவரிடமும் வேலை செய்யும் அனுபவமும் கிடைத்தது. அங்கு வேலை செய்த அனுபவத்தில் தான் ராடன் நிறுவனத்தின் தொடர்பு கிடைத்தது. அண்ணாமலை, அரசி, செல்வி ஆகிய நாடகங்களுக்கு வேலை செய்திருக்கிறேன். என்னுடைய வேலையை பார்த்து ராதிகா மேடம் "செல்வியை கன்னடத்தில் ரீமேக் எடுக்க நினைக்கிறேன். நீதான் டைரக்டர்" என்று கூறினார். ராதிகா மேடம் தயாரிப்பாளர், நம்மதான் டைரக்டர் என்று நினைக்கும் போது மிகப்பெரிய சந்தோஷம்.

ஆனால் மொழி தெரியாத இடத்தில் தங்கி, உதயா டிவிக்காக ரீமேக்கில் டைரக்ட் செய்தேன். அங்கு வேலை செய்யும் போதே அடுத்த ஒரு பெரிய சர்ப்ரைஸ் கிடைத்தது. மெட்டி ஒலி தயாரிப்பாளர் சினி டைம்ஸ் இருந்து அழைப்பு வந்தது. அதாவது மெட்டி ஒலி கன்னடத்தில் ரீமேக் செய்கிறோம். ஏற்கனவே ஆயிரம் எபிசோடுகள் போய்விட்டது. என்னை டைரக்ட் செய்வதற்காக கேட்டார்கள். அங்கு கிடைத்த பந்தம் என்னால் மறக்கவே முடியாது. இதே மெட்டி ஒலி சீரியல் தமிழில் அசிஸ்டெண்ட் டைரக்ட் வாய்ப்பு கிடைக்காதா என்று சித்திக் சாரை போய் பார்த்திருக்கிறேன். ஒரு கம்பெனியில் ஒரு சீரியலில் வேலை செய்வதே பெரிய விஷயம். ஆனால் 2008லிருந்து 2017வரை பத்து வருடங்கள் இயக்குநராக வேலை செய்தேன்.



மெட்டிலி ஒலி கன்னடத்தில் செய்து கொண்டிருக்கும் போதே உதயா டிவியில் சினி டைம்ஸ்லேயே மழை என்ற கன்னட சீரியல் இயக்குநர் வாய்ப்பு கிடைத்தது. இதற்கிடையிலேயே திருமணம், குழந்தை ஆனது. குழந்தை பிறந்தவுடன் குடும்பம் சென்னையில் இருக்கும் போது நான் பெங்களூரில் வேலை செய்வது சிரமமாக இருந்தது. சித்திக் சாரிடம் தெரிவித்தேன். உடனடியாகவே சன் டிவியில் 2011ல் "முந்தானை முடிச்சு" என்ற நாடகத்தில் என்னை இயக்குநராக்கினார். அதனை தொடர்ந்து மரகதவீணை, கேளடி கண்மணி.... என்று அதே கம்பெனியில் தொடர்ந்து வேலை செய்தேன். சார் தனியாக மூன் தொலைக்காட்சி தொடங்கினார்.

பெரிய நிறுவனமான விஷன் டைம்ஸ் இருந்து கல்யாணப்பரிசு வாய்ப்பு கொடுத்தார்கள். கல்யாணப்பரிசு அடுத்த பாகத்திலும் எனக்கு வாய்ப்பு கொடுத்தார்கள். அந்த நாடகத்தில்தான் நான் மிகவும் பேசப்பட்டேன். அதே விஷன் டைம்ஸ் நிறுவனத்தில் ரேவதி, தலைவாசல் விஜய் அவர்கள் நடிக்கும் அழகு நாடகத்தை இயக்கும் வாய்ப்பு கிடைத்தது. 2019ல் சன் விருதுகள் விழாவில் சிறந்த இயக்குநர் விருதை வாங்கி கொடுத்தது. நான் பெங்களூரில் மாங்கல்யா என்ற நாடகத்திற்கும் சிறந்த இயக்குநர் விருது கிடைத்தது.

கொரோனா காலத்தில் சின்ன தடுமாற்றம் இருந்தது. நாடகத்தை தொடர முடியாமல் போனது. ஹோம் மூவி மேக்கர்ஸ் இருந்து கண்மணி நாடகம் இயக்கும் வாய்ப்பு கிடைத்தது. சரிகம நிறுவனத்தின் சார்பாக அன்பே வா நாடகம் இயக்க வாய்ப்பு கிடைத்தது.

மறுபடியும் சொந்த வீடான விஷன் டைம்ஸ் இருந்து மீண்டும் அழைப்பு வந்தது. அதுதான் தற்போது ஒளிபரப்பாகி கொண்டிருக்கும் "கயல்" நாடகம். பொதுமக்கள் மத்தியில் யதார்த்தமான நாடகம் என்ற பெயர் வாங்கிக் கொண்டிருக்கிறது. பொதுமக்கள் மத்தியில் நிறைவான நாடகமாக எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்பது எங்கள் குழுவின் ஆசை. அதற்கு அனைவரது ஆசிர்வாதமும் தேவை. இதுவரைக்கும் எனக்கு ஆதரவளித்த அனைத்து தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், நடிகர், நடிகைகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சினிமாத்துறையில் முக்கிய ஊக்கமான காரணம் மாமா நாராயணன், எனது அண்ணன் இயக்குநர் சமுத்திரகனி, என்னுடைய குருநாதர் சுந்தர் கே. விஜயன் இவர்கள் மூவரையும் வாழ்க்கையில் மறக்க முடியாது. எழுத்தாளர் ராஜ்பிரபு, சுபா வெங்கட் கிரியேட்டிவ் ஹெட் இவர்கள் இல்லாமல் நான் இல்லை.

நேர்காணல்:
கி.விடாரண்யம், செய்தி ஆசிரியர்



## கபாலிகான் நியூஸ்

இரண்டு காதுகளையும் பொத்திக் கொண்டு உள்ளே வந்தார் கபாலி கான்.

“என்னாச்சு “என்று கேட்டோம்.

வர வழி பூரா பட்டாசு வெடிச்ச சத்தம் கேட்டு காதை மூடி மூடி அப்படியே பழக்கம் ஆகிடுச்சு என்றார் கபாலி கான்.

சோன்பப்டி டப்பாவை கொடுத்தோம். இன்னொரு டப்பா கொடுங்க என்று கேட்டு வாங்கிக் கொண்டார். வாங்கி கையில் வைத்துக் கொண்டு அதைத் தொடர்ந்து கொஞ்சம் வாயில் போட்டு சுவைத்தார்.

நல்லாயிருக்கு என்றவர் இந்த தீபாவளி எல்லோரும் கொண்டாடினார்கள் என்பது நமக்கு தெரியும் ஆனால் அரசியல்வாதிகள் எப்படி கொண்டாடினார் என்பதை பார்ப்போமா?

“சொல்லுங்க கேட்டுக்கறோம்“ என்றோம்.

நம்ம பிரதமர் தீபாவளி கொண்டாடினார்.

“எப்படி”?

தீபாவளி பண்டிகையை ராணுவ வீரர்களுடன் கொண்டாடுவதை பிரதமர் மோடி வழக்கமாக கொண்டுள்ளார். அதன்படி, ஜம்மு காஷ்மீரின் ராஜோரி மாவட்டத்தின் நவ்ஷேராவில் உள்ள ராணுவ வீரர்களுடன் தீபாவளி கொண்டாடினார். முதலில் பணியின் போது உயிரிழந்த ராணுவ வீரர்களின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து பிரதமர் மோடி மரியாதை செலுத்தினார்.

நாட்டு மக்கள் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க ராணுவ வீரர்களே காரணம் என, பிரதமர் மோடி பாராட்டியுள்ளார். பாரத மாதாவின் பாதுகாப்பு அரணாக ராணுவ வீரர்கள் திகழ்வதாகவும் மோடி புகழாரம் சூட்டினார்.

“ஒஹோ”

ஆனா தமிழக முதல்வர் வாழ்த்துகூட சொல்லலைன்னு குறைபட்டுக்கறாங்களே!

“அவர் எப்பவுமே சொன்னதில்லையே?

“கட்சித்தலைவரா சொல்லலன்னா பரவாயில்லை.முதல்வரா இருந்து சொல்லாட்டி எப்படிக்கறாங்க”

அடடே!

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பூர்வ குடிமக்களான நரிக்குறவர் இன மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் முதல்வர் அவர்களுக்கு வழங்கிய தீபாவளி பரிசு என்று மகிழ்ச்சியில் இருக்கிறார்கள் பயனாளிகள்.

அரசியலில் தீபாவளி வெடிச் சத்தம்






கேட்கிறதே?

ஆமாம் சசிகலா ஆரம்பித்து வைக்க பன்னீர் கொளுத்திப் போட எடப்பாடி தண்ணி ஊத்தி அணைக்க எதிர்பார்த்த சத்தம் ஏற்படவில்லை என்பது உண்மை

"விளக்கமா சொல்லுங்க!"

சிறையில் இருந்து வெளியே வந்த சசிசிகலா அதிமுக தொண்டர்கள் இடம் அவர்கள் மனதில் இடம் பிடிக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு அடியாக எடுத்து வைக்கிறார் முதல்



கட்டமாக தொண்டர்களும் நிர்வாகிகளுடன் தொலைபேசியில் பேசினார் அடுத்து கடிதம் போட்டார் அதிமுகவின் உன் விழா தினத்தன்று அதாவது 23ஆம் தேதி தன்னுடைய அரசியல் பிரவேசத்தின் அடுத்த நகர்வை கொண்டு சென்றார் அதற்கு ஆதரவாக நிருபர்கள் கேட்ட கேள்விக்கு சசிகலாவை சேர்க்க வேண்டும் என்ற முடிவை நிர்வாகிகள் தான் இருக்க வேண்டும் என்று பன்னீர்செல்வம் சொன்னார் இதற்கு கட்சியில் பெரும் எதிர்ப்பு கிளம்பியது குறிப்பாக ஜெயக்குமார் பேட்டியில் சசிகலாவை கட்சியில் சேர்க்கும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற எடப்பாடியின் வாய்ஸ் ஆக பேட்டியளித்தார் இதையடுத்து எடப்பாடி சசிகலா வந்து சேர்வதற்கு எந்த விதத்திலும் வாய்ப்பில்லை என்று தனது நெருங்கிய நண்பர்களிடமும், கட்சிக்காரர்களும் உறுதி அளித்து வருகிறார்.

விரைவில் நகர்புற உள்ளாட்சித் தேர்தல் நடக்க இருப்பதால் அப்போது இன்னும் அரசியலில் பரபரப்பு சற்று அதிகமாக இருக்கும் என்று சொல்லியபடியே வெளியேறினார் கபாலி கான்!



# முகம் பொலிவுடன் இருக்க வேண்டுமா?

சரும பிரச்சனைகளை அதிகமாக எண்ணெய் பசை சருமத்தினர் தான் சந்திப்பார்கள். அவர்களது முகத்தில் எந்நேரமும் எண்ணெய் வழிந்தவாறு இருப்பதால், அவர்களின் முகம் பொலிவிழந்து, ஒருவித கருமையாக காணப்படும். இவர்களது முகத்தை பளிச்சென்று வெள்ளையாக்க சில இயற்கை வழிகளை பார்க்கலாம்.

4 டீஸ்பூன் எலுமிச்சை சாற்றில், 1 டீஸ்பூன் தேன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான அல்லது குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இதனை ஒருநாள் விட்டு ஒருநாள் செய்ய வேண்டும்.

3 டீஸ்பூன் கற்றாழை ஜெல்லுடன், 1 டீஸ்பூன் தேன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ச்சியான நீரில் கழுவ வேண்டும்.





2 டேபிள் ஸ்பூன் ஆரஞ்சு ஜூஸில், 1 சிட்டிகை மஞ்சள் தூள் மற்றும் 1 டீஸ்பூன் தேன் சேர்த்து கலந்து, இரவில் படுக்கும் முன் முகத்தில் தடவி இரவு முழுவதும் ஊற வைத்து மறுநாள் காலையில் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், நல்ல மாற்றத்தைக் காணலாம்.

4 டீஸ்பூன் தக்காளி சாற்றினை எடுத்துக் கொண்டு, அத்துடல் 1 டீஸ்பூன் தேன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் நீரில் கழுவ வேண்டும். இதனை தினமும் செய்து வந்தால் மிகவும் நல்லது. விரைவில் சருமத்தின் எண்ணெய் பசையை கட்டுப்படுத்தி சருமத்தை பொலிவாக்கும்.

இந்த இயற்கை வழிமுறைகளை தவறாமல் தினமும் செய்து வந்தால் உங்கள் சருமத்தினை பொலிவாக்கலாம்.

**Dhana Spandana Sanmugavel**
Yoga Therapy & Naturopathy, Svg.

# முடிவுகள் முடிவானதல்ல!



ஒரு பெண்10 கிலோ மீட்டர் தூரத்தை கடப்பதற்கு ஒரு மணி நேரம் எடுத்துக் கொண்டார்.

ஒரு ஆண் அதே தூரத்தை கடப்பதற்கு ஒன்றரை மணி நேரம் எடுத்துக்கொண்டார். இவர்களில் யார் வேகமானவர் மற்றும் ஆரோக்கியமானவர் என்று கேட்டால் நிச்சயமாக நமது பதில் அந்த பெண் என்றுதான் வரும்.

எனினும் இப்பொழுது அந்த பெண் நன்கு பண்படுத்தப்பட்ட சாலையில் அந்த தூரத்தைக் கடந்தார் என்றும்.

அந்த ஆண் கரடுமுரடான பாதையில் அதைக் கடந்தார் என்றும். நான் சொன்னால் இப்பொழுது உங்களுடைய பதில் மாறும் அல்லவா?

ஆம் நிச்சயமாக இப்பொழுது அந்த ஆண் தான் வேகமானவர் என்று சொல்லுவோம்.

மறுபடி இப்பொழுது அந்த பெண்ணுக்கு 50 வயது என்றும் அந்த ஆணுக்கு 25 வயது என்றும் கூடுதல் தகவலை நான் கொடுக்கும் பொழுது.

உங்களுடைய பதில் மறுபடி மாறும் அல்லவா?

ஆமாம் இப்போது அந்த பெண் தான் வேகமானவர் என்று சொல்வோம். மேலும் அந்த ஆண் அவவருடைய எடை 140 கிலோ என்றும் அந்த பெண்ணுடைய எடை 65 கிலோ என்று நான் சொல்லும்போது மீண்டும் இந்த பதில் மாறும்.

இப்பொழுது அந்த ஆண் தான் வேகமானவர் என்று சொல்லுவோம். இதேபோல அந்த ஆண் பற்றியும் அந்த பெண் பற்றியும் நம்முடைய இந்த முடிவானது அவர்களைப் பற்றிய அதிகத் தகவல்கள், கூடுதல் தகவல்கள கிடைக்கக் கிடைக்க மாறிக்கொண்டே இருக்கும்.

இதுதான் வாழ்க்கையிலும். நாம் ஒவ்வொருவரைப் பற்றியும் மிக வேகமாக நம்முடைய அபிப்பிராயங்களை உருவாக்குகிறோம்.

அவர்களோடும், அவர்களின் செயல்பாடுகளோடும் நம்மை ஒப்பிட தொடங்குகின்றோம்.

இதனால் நாம் நமக்கு நாமே தீங்கு விளைவித்துக் கொள்கின்றோம். வாழ்க்கை என்பது ஒவ்வொருவருக்கும் வேறுபட்டதாகும்.

ஒவ்வொருவருக்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் வேறுபட்டதாகும். ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்கும் அறிவும், பொருளும் வேறாக இருக்கலாம். ஒவ்வொருவரும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் வேறாக இருக்கலாம். அதற்கான தீர்வுகள் கூட வேறாக இருக்கலாம்.

எனவே வாழ்க்கை என்பது வாழ்ந்து அனுபவிக்க வேண்டிய ஒன்றாகும். அதை தேவையில்லாமல் மற்றவர்களோடு ஒப்பிட்டு வீணாக்கிக் கொள்ளாதீர்கள்.

நீங்கள் தான் உயர்ந்தவர்கள். நீங்கள் தான் சிறந்தவர்கள்.உங்களுடைய முழு சக்தியையும் ஆற்றலையும் பிரயோகிக்க கற்றுக் கொள்ளுங்கள்.

உங்களுடைய சூழ்நிலைகளுக்கு தகுந்தவாறு முடிவுகளை எடுத்து முன்னேறுங்கள்.

எப்போதும் ஆரோக்கியமாக இருங்கள்.

அமைதியாக இருங்கள்.

திருப்தி அடைந்தவராக இருங்கள்.

புன்னகையைப் படர விடுங்கள்.

மனம்விட்டு சிரிக்கப் பழகுங்கள்.

சமுதாயத்திற்கும், இந்த தேசத்திற்கும் ஏதாவது சேவை புரிந்து கொண்டே இருங்கள்.

– **வி.பன்னீர்செல்வம்,** (ஆசிரியர்_ஓய்வு)
வில்லிவாக்கம்

# நோயை விரட்டும் வெந்தயம்!



**வெ**ந்தயத்தில் புரதம், கொழுப்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து, பாஸ்பரஸ், பொட்டாசியம், இரும்புச் சத்து, சோடியம், உயிர் சத்துக்கள், நிக்கோடினிக் அமிலம், கயோலின் உட்பட இன்னும் எண்ணற்ற சத்துக்கள் நிறைந்து உள்ளது.

மேற்கண்ட சத்துக்கள் இருப்பதால் கொலஸ்ட்ராலை குறைக்க வெந்தயம் உதவி செய்கிறது. முக்கியமாக கொழுப்புப்புரதத்தை குறைக்க உதவுகிறது. இதய நோய்க்கு வெந்தயம் ஒரு சிறந்த மருந்து. வெந்தயத்தில் உள்ள நார்ச்சத்து இதய அடைப்பு இடர்பாட்டை குறைக்கும். இதில் பொட்டாசியம் உள்ளதால், இதயத் துடிப்பு மற்றும் ரத்தக் கொதிப்பை கட்டுப்படுத்தும். சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு, சர்க்கரையை ரத்தம் உட்கொள்ளும் வீதம் குறையும். வெந்தயத்தில் அமினோ அமிலம் உள்ளதால், இன்சுலின் உற்பத்தியை அது தூண்டிவிடும். தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு கண்டிப்பாக வெந்தயம் தேவை. அதிலுள்ள டையோஸ்ஜெனின் பெண்களுக்கு தாய்ப்பால் சுரப்பதை அதிகரிக்கும்.



இதுதவிர வெந்தயம் சீதக் கழிச்சல், உடல் எரிச்சல், தாகம், இளைப்பு நோய் போன்ற இவை அனைத்தையும் நீங்கும். அது மட்டும் அல்ல, வெந்தயம் கல்லீரல் நோய்களை நீக்கும்.

வெந்தயக் கீரை ஜீரண சக்தியை செம்மைப்படுத்துகிறது. சொறி, சிரங்கை நீக்குகிறது. பார்வைக்கோளாறுகளைச் சரி செய்கின்றது. வெந்தயக் கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டால் காசநோயும் குணமாவதாகக் கூறுகின்றனர். இந்தக் கீரை வயிற்று நோய்களையும் குணப்படுத்துகின்றது. வெந்தயக் கீரையை வேக வைத்து அதனுடன் தேன் கலந்து கடைந்து உண்டால் மலம் சுத்தமாகும். இதனால் உடல் சுத்தமாகும். அத்துடன் வெந்தயக் கீரையை உண்டால் குடல் புண்களும் குணமாகின்றன. மலம் கழிக்கும் போது ஏற்படும் உளைச்சலையும் எரிச்சலையும் வெந்தயக்கீரை குணப்படுத்துகின்றது. வெந்தயக்கீரையை வெண்ணெயிட்டு வதக்கி உண்டால் பித்தக் கிறுகிறுப்பு, தலை சுற்றல், வயிற்று உப்பிசம், பசியின்மை, ருசியின்மை ஆகியவை குணமாகும். உட்சூடும் வறட்டு இருமலும் கட்டுப்படும்.



நீண்ட நேரம் அமர்ந்திருந்து வேலை செய்ய முடியாமல் இடுப்பு வலிப்பவர்கள் வெந்தயக் கீரையுடன் கோழி முட்டை மற்றும் தேங்காய்ப்பால் சேர்த்து நெய்யில் வேக வைத்து உணவுடன் சேர்த்து வந்தால் இடுப்பு வலி நீங்கும். வெந்தயக் கீரை ஒரு சிறந்த பத்திய உணவாகும். இதை அரைத்து நெய் சேர்த்து சாதத்துடன் பிசைந்து சாப்பிட்டால் தொண்டைப்புண், வாய்ப்புண் ஆகியவை ஆறும். இந்தக் கீரையை வதக்கி அதனுடன் வாதுமைப் பருப்பு, கசகச கோதுமை ஆகியவற்றைச் சேர்த்துப் பால்விட்டு அரைத்து நெய்விட்டுக் கிண்டி உட்கொண்டால் உடலுக்கு வலிமையும், வனப்பும் ஏற்படும்.

அத்துடன் இடுப்பு வலியும் நீங்கும். வெந்தயக் கீரையுடன் சீமைப்புள், அத்திப்பழம், திராட்சை ஆகியவை சேர்த்துக் கஷாயமிட்டு தேன் கலந்து உண்டால் மார்பு வலி, மூக்கடைப்பு ஆகிய நோய்கள் நீங்கும். மூலநோய், குடல் புண் போன்ற நோய்களுக்கும் இந்தக் கீரை சிறந்த மருந்தாகத் திகழ்கிறது. வெந்தயக் கீரையை அரைத்துச் சூடு செய்து வீக்கங்கள் மீது பூசினால் வீக்கம் குறையும். இவ்வாறு செய்வதால் தீப்புண்களும் குணமாகும். இந்தக் கீரையை சீமை அத்திப்பழத்துடன் சேர்த்துக் கரைத்துக் கட்டிகளின் மீது பற்றுப் போட்டால் அவை விரைவில் பழுத்து உடையும். வெந்தயக் கீரைக்கு இரத்தத்தில் உள்ள சர்க்கரையையும், சிறுநீரில் உள்ள சர்க்கரையையும் குறைக்கும் ஆற்றல் உள்ளது. இந்தக் கீரையைத் தொடர்ந்து 40 நாட்களுக்குச் சாப்பிட்டு வந்தால் நீரிழிவு கட்டுப்படும். எனவே, நீரிழிவு உள்ளவர்கள் வெந்தயக் கீரையைத் தொடர்ந்து சாப்பிடுவது நல்லது. வெந்தயக் கீரை சீரண சக்தியை அதிகரித்து, பசியைத் தூண்டுகிறது.

சிறுநீர் உறுப்புகளை சுத்தம் செய்கிறது. மூளை நரம்புகளைப் பலப்படுத்துகிறது. வயிற்றுக் கட்டி, உடல் வீக்கம், சீதபேதி, குத்திருமல், வயிற்று வலி ஆகியவற்றைக் குணப்படுத்துகிறது. வெள்ளைப் பூசணிக்காய் சாம்பாரில் வெந்தயக் கீரையைச் சேர்த்துச் சாப்பிட்டால் பெருத்த உடல் இளைக்கும்.

- வெந்தயக் கீரை ஜீரண சக்தியை அதிகரிக்கிறது. ரத்தத்தை சுத்திகரிக்கிறது. சொறி, சிரங்கு வராமல் தடுக்கிறது.
- வெந்தயக் கீரையை தேனுடன் உண்டு வந்தால் மலச் சிக்கல் தீரும்.
- வெந்தயக் கீரையை அரைத்து நெய்யுடன் சேர்த்து உண்டு வந்தால் தொண்டைப் புண், வாய்ப்புண்

ஆறும்.

- மூலை நோய், குடல் புண் போன்ற நோய்களுக்கு இந்தக் கீரை சிறந்த மருந்து. அத்துடன் வெந்தயக் கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோய் கட்டுப்படும்.



- வெந்தயக் கீரையை உண்டு வந்தால் சிறுநீர் சம்மந்தமான பிரச்சனைகள் தீரும். நரம்புகளை பலப்படுத்தும். வயிற்றுக்கு கட்டி, உடல் வீக்கம், சீத பேதி, குத்திருமல், வயிற்று வலி போன்ற அனைத்தும் குணமாகும்.



- வெந்தயத்தை ஊற வைத்து அது முளை கட்டவும், அதனுடன் பொடியாக நறுக்கிய வெங்காயம், கேரட், பீட்ரூட் துருவல், தக்காளிப் பழத்துண்டுகள், உப்பு, மிளகுப்பொடி, எலுமிச்சை சாறு கலந்து சாப்பிடவும். சுவையான சத்துள்ள குளிர்ச்சியான சாலட்டும் கூட.
- வெந்தயம், ஓரிதழ் தாமரை, விடத்தலை வேர், சுக்கு, வால் மிளகு வகைக்கு 20 கிராம் எடுத்து கஷாயம் செய்து சாப்பிட்டு வர உடல் அரிப்பு நீங்கும்.



- முகம் பளபளப்பாக இருக்க வெந்தயத்தை அரைத்து முகத்தில் பேஸ்பேக் போடலாம். பிறகு 10 நிமிடம் கழித்து கழுவவும். இப்படி சில நாட்கள் செய்து வர முகம் பளிச்சிடும்.
- தினமும் காலையில் ஒரு தேக்கரண்டி வெந்தயத்தை வாயில் போட்டு மென்று தண்ணீர் குடித்து வாருங்கள். வாய்க்கு கசப்பாக இருப்பதெல்லாம் உடலுக்கு நன்மையைத் தான் செய்யும். அந்த வகையில் இந்த வெந்தயம் கசக்கத் தான் செய்யும். எனினும், இது இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை மட்டுமின்றி கொழுப்புச் சத்தையும் கட்டுப்படுத்தும். இது தவிர வெந்தயம் உடலுக்கு குளிர்ச்சியைத் தரும்.



- ஒரு துண்டு இஞ்சியுடன் சிறிது வெந்தயம் வைத்து அரைத்து சாப்பிட்டால் பித்தம் விலகும்.
- வெந்தயத்தில் விட்டமின் ஏ இருப்பதால் கண் பார்வையை மேம்படுத்த உதவும்.



- வெந்தயத்தை சிறிது வறுத்து சுக்குடன் வைத்துப் பொடியாக்கி, கொஞ்சம் கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டு வர ஆரம்பநிலை வாதம் குணமாகும்.
- தண்ணீரில் நான்கு மணிநேரம் ஊற வைத்து எடுத்த வெந்தயத்தை காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர குடல் சம்மந்தமான நோய்கள் அனைத்தும் குணமாகும்.
- ஊற வைத்த வெந்தயத்தை குழந்தையை பெற்ற தாய்மார்கள் உண்டு வர. பால் நன்றாக சுரக்கும். குழந்தைக்கும் நல்லது. தாய்க்கும் உடல் சத்தை அதிகரிக்கும்.
- வெந்தயத்தில் இரும்புச் சத்து அதிகம் இருப்பதால் முடி கொட்டாது, சீக்கிரத்தில் நரை வராது. அத்துடன் முடியும் நன்றாக வளரும்.
- முளைக் கட்டிய வெந்தயத்தை தயிரில் கலந்து அருமையான ஆரோக்கியமான தயிர் பச்சடி செய்யலாம். இதனால் உடலை வெப்பம் தாக்காது. வெயில் காலத்தில் வேர்குரு வராது. (வெந்தயத்தை முளை கட்டி ஓரிரு முறை களைந்தால் அதன் கசப்பு கணிசமாகக் குறைந்து விடும்)
- தீக்காயத்திற்கு வெந்தயத்தை ஊறவைத்து விழுதாக அரைத்து பற்றுப் போட்டால் சீக்கிரத்தில் குணம் கிடைக்கும்.
- அவுரி இலையுடன் சிறிது வெந்தயம் மிளகு சேர்த்து கஷாயம் செய்து குடித்தால் பூரான் கடி விஷம் முறியும்.
- தினசரி 15 கிராம் வெந்தயத்தை தவறாமல் உண்டு வந்தால், ரத்த அழுத்தம் சீராகும், ரத்தம் சுத்தமாகும்,ரத்தத்தில் உள்ள கொழுப்பும் குறையும். ஜீரண சக்தி அதிகரித்து உடல் எடையும் குறையும். வெந்தயத்தை ஊற வைத்து அரைத்து சீயக்காய் போல தலைக்குத் தேய்த்துக் குளித்தால் கூந்தல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.



**தகவல்:ஷேக் பரீத்**
**திரைப்படத் தயாரிப்பாளர்**

# அன்பான "அத்தை நடத்தை" அரவணைக்கும் விலங்குலகம்.

முனைவர். பா. இராம் மனோகர். தஞ்சாவூர்.



நமது உலகத்தில் அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சி தீவிரமான பல மாற்றங்களைக் கண்டு மனித இனம் பொருட்பெருக்கத்தினாலும், இயந்திரத்தனத்தாலும் சமூக வாழ்வினை திசை மாற செய்துவிட்டது !இது, உண்மை தானே !? தேவைகளுக்காக உதவுகின்ற நிலை குறைந்து பெருமைகளுக்க்காக உதவுகின்ற வழக்கம் அதிகரித்துவிட்டது. தற்போதைய 21, ஆம் நூற்றாண்டில் நவீன, இளைஞர்கள், குழைந்தைகள் வாழ்க்கையில் உறவுகள், சொந்தம் என்பது அவசியமற்ற சொற்றொடர்களாகிவிட்டது! தனிக்குடும்பங்கள் (Nuclear Families), பெருகிவிட்டது. தந்தை, தாய், ஒரு குழந்தை என்பதே குடும்பாகிவிட்டது. இயற்கையாக மனித இனம் சிறப்பாக வாழ உருவாக்கி கொண்ட முறைதான், "சமூக வாழ்க்கை "ஆகும். பலர் ஒன்று கூடி இணைந்து வசிக்கும் கலாச்சாரம் சமூக உயிரியல் ஆகும். எனினும், இத்தகைய சமூகம் ஒற்றுமை உணர்வுடன் இயங்காமல், வன்முறை, பிரிவினை, வெறுப்புணர்வு அதிகரித்தும் விட்ட நிலை, கவலைக்குரியதாகும். ஒரு சமூக ஆர்வலனாக, எழுத்தாளனாக, நான் மேற்கண்ட பிரச்சனை பற்றி கவலை பட்டு, வருத்தம் அடையும் நிலையில், எனது இளமை கால காட்டு விலங்குகள் ஆய்வு அனுபவத்தினை நினைவு கூர்ந்து பார்த்தேன் !சற்று மகிழ்ச்சி அடைந்தேன்.

ஆம் ! பல ஆண்டுகளுக்கு முன் ராஜஸ்தான் மாநில தலைநகரம் ஜெய்ப்பூருக்கு அருகில் உள்ள அம்பாகார் வன பகுதியில் நான் குரங்குகள் வாழ்க்கை பற்றிய கள ஆய்வு மேற்கொண்டு வந்தேன். ஒரு குளிர் கால காலை நேரம், அப்பொழுது ரீசஸ் என்ற செம்முக குரங்கு குழுவில், தாய் குரங்கு தன் குட்டியினை ஈனுகின்ற காட்சி கண்டறிய வாய்ப்பு ஏற்பட்டது. அந்நிலையில் தாயின் முக பாவனையினை கண்டு உணர்ந்து குழுவில் உள்ள மற்ற பெண் குரங்குகள், தாயினை சுற்றி அமர்ந்து கொண்டனர். தாய் தன்னைத் தானே சுழற்றிக்கொண்டது. எவ்வித அலறல், கூச்சல் வெளிப்படவில்லை. எனினும் அச்ச உணர்வு முகத்தில் வெளிப்பட்டது. தாயின் அடி வயிற்றுப்பகுதியில் அசைவுகள் தோன்றியது.

தாய் குரங்கின் இன உறுப்பிலிருந்து குட்டி இரத்தத்துடன் வெளியேறியது. பின்னர்



முழுவதும் தாய் சேய் இணைப்பு திசுவுடன் முழுவதும் குட்டி ஈன்ற பிறகு (placenta)தாய் குட்டியினை கையில் தூக்கி, தொட்டு, முகர்ந்து பார்த்தது. பின்னர் தன் நாக்கினால் உடல் முழுவதும் நக்கி, நீவி தூய்மை படுத்தியது. வெளியேறிய புதிய குரங்கு குட்டி தன் கிரீச்சிட்ட உச்ச கட்ட குரல் ஓசை எழுப்பி மற்ற பெண் குரங்குகளை ஈர்த்தது. அந்த பெண் குரங்குகள், குட்டியின் அருகில் வந்து தமது குழுவின் புதிய உறுப்பினரை ஆவலாக கண்டு தம் கைகளாலும் தூக்கி, தடவி கொடுத்து மகிழ்ந்தன. தாயின் மடியில் குட்டி இருந்தாலும் அவ்வப்போது மற்ற பெண் குரங்குகள் சிறு குட்டியினை அன்புடன் பராமரிப்பு செய்த நிலை, “அத்தை நடத்தை “என அழைக்கப்படுகிறது.

இத்தகைய குரங்குகள் நடத்தையை, நான் கண்டு மகிழ்ந்து அதிசயித்த நேரத்தில், குரங்குகளில் மட்டும் அல்ல., இது போன்ற நடத்தைகள் மற்ற விலங்குகளிலும் காணப்படுவதாக வில்லியம் டீ. ஹாமில்டன் என்ற அறிவியல் ஆய்வாளர் கூறுவதை அறிந்தேன். நவீன சமூக உயிரியியலுக்கான





கோட்பாடுகளை அவர் விளக்குகையில் இன நல பண்பு (Altruism ), கூட்டுறவு (cooperation ), துன்பத்தில் உதவி (spite), தன்னலமில்லா உதவி, (Eu sociality )ஆகிய பண்புகள் சார்ந்த நடத்தைகள், விலங்குகளின் சமூக குழுக்களில் உறவுகளின் வலிமையினை பொறுத்து அமைகிறது என கூறினார்.

இளம் உயிரினங்களை (பெற்றோர்களை தவிர )மற்ற உறவு விலங்குகள் முழுமையாக அல்லது ஓரளவு பராமரிக்கும் நிகழ்வுகள் விலங்குகள் உலகத்தில் அதிகம் காணப்படுகின்றன !மிக சிறு உயிரினங்களான கரையான், தேனீக்கள், போன்ற பூச்சியினங்களிலும் முட்டைகளை பாதுகாத்தலிலும் அத்தை உயிரினங்கள் மேற்கொள்வது வியப்பு ஆகும். எனினும் மீன்கள், நீர், நில வாழ்விகள் என்ற தவளைகள் ஆகியவற்றில் இப்பண்பு இல்லை !பறவைகளில் குயில் முட்டைகளை காகம்,, தவிட்டு குருவி பராமரித்தல் தேனி பிடிப்பான், செஞ்சிறாட்டாய் என்ற கொண்டை லாத்தி பறவை ஆகியவற்றில் இத்தகைய பண்புகள் உள்ளன. பாலூட்டிகளில் யானை, ஓநாய், கீரிப்பிள்ளை, சிங்கம் போன்ற விலங்குகள் இதனைப் பின்பற்றி வாழ்வது ஆச்சரியம் ஆகும்.

அத்தை மடி மெத்தையடி என்ற பாடல் கேட்டு மகிழ்ந்த காலம், உறவுகளே உணர்வுகளால் ஒருவருக்கொருவர் அன்புடன் உரையாடல் செய்து மகிழ்ந்த நம் மனித இனம், பொருளாதார உயர்வு, பதவி, வசதி, வாய்ப்புகளால் மனம் பிறழ்வு ஏற்பட்டு தீவுகளை போல் மாறிவிட்டோம் !விலங்குகளில் தொடரும் பாரம்பரிய பண்பு நாம் ரசித்து மகிழ மட்டும் இல்லை !பின்பற்றி நல்ல சமுதாயம் மலர முயற்சி செய்வோம் !சிந்திப்போமா??

# ஜாமீன் பற்றி அறிவோமா?



***ஜாமீன் என்றால் என்ன?***

*குற்றவியல் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் தற்காலிகமாக விடுவிப்பதை பிணை அல்லது ஜாமீன் (ஙிணீவீறீ) எனக் கூறலாம். குற்றம்சாட்டப்பட்டவர் காவல்துறை பாதுகாப்பு அல்லது நீதிமன்றக் காவலில் இருக்கும்போது வழக்கறிஞர் உதவியுடன், 2 பேர் உத்தரவாதம் அளித்து வெளியே அழைத்து வருவது ஜாமீன். அதன்பிறகு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும். விசாரணையில் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்படும். வழக்கமான ஜாமீன், முன் ஜாமீன், இடைக்கால ஜாமீன் என 3 பிரிவுகள் உள்ளன.*

***இடைக்கால ஜாமீன் என்றால் என்ன?***

*இடைக்கால ஜாமீன் என்பது முன்ஜாமீன் மற்றும் வழக்கமான ஜாமீன் குறித்து முடிவெடுப்பதற்கு நீண்டகாலம் தேவைப்படும்போது, இடைக்கால ஜாமின் வழங்கப்படுகிறது.*

***முன்ஜாமீன் என்றால் என்ன?***

*ஏதாவதொரு பிரச்சனையில் அல்லது எதிராளிகள் பிணையில் வெளியில் வரமுடியாத வகையில் ஒரு பொய்யான வழக்கு ஒன்றை தொடர்ந்து, அந்த வழக்குகளில் எப்போது வேண்டுமானாலும் கைது செய்யப்படும் சூழல் இருக்கும்பட்சத்தில், பாதிக்கப்பட்டவர் முன்ஜாமீன் கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யலாம். மாவட்ட நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் ஆகியவற்றில் முன்ஜாமீன்கோரி முறையிடலாம். சி.ஆர். பிசி சட்டப்பிரிவு 438ன்படி அவருக்கு ஜாமின் வழங்கப்படும்.*

***முன்ஜாமீன் ரத்து செய்யப்படுமா?***

*முன்ஜாமீன் வழங்கும்போது ஒரு சில நிபந்தனைகள் ஜாமீன்கோரியவருக்கு நீதிமன்றம் விதிக்கும். அந்த நிபந்தனைகளை முறையாக கடைபிடிக்காதபோது அல்லது மீறினால் முன்ஜாமீன் ரத்து செய்யப்படும். புகார்தாரர் அல்லது விசாரணை தரப்பு முன்ஜாமீனை ரத்து செய்யக்கோரி முறையிட்டு, அவர்கள் கூறும் காரணங்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் இருந்தால், முன்ஜாமீனை நீதிமன்றம் ரத்து செய்யும்.*

***முன்ஜாமீனில் இருக்கும்போது, ரெகுலர் ஜாமீன் எடுக்க வேண்டுமா?***

*ஏற்கனவே முன்ஜாமீனில் இருப்பவர்கள், நீதிமன்ற நடைமுறைகள் தொடரும் வரை வழக்கமான ஜாமீன்கோரி மனுத்தாக்கல் செய்யத்தேவையில்லை. நீதிமன்றம் முன்ஜாமீனை ரத்து செய்யாதபோது மட்டுமே இது பொருந்தும். சில வழக்குகளில் முன்ஜாமீன் மட்டுமே போதுமானது.*

**விசாரணைக் கைதியை அதிகபட்சம் எவ்வளவு நாட்கள் சிறையில் வைக்கலாம்?**

குற்றவியல் சட்டம் 436 ஏன்படி விசாரணைக் கைதி நீதிமன்றம் மூலம் ஜாமீனில் விடுவிக்கப்படலாம். அதாவது, குற்றம்சாட்டப்பட்ட வழக்கின் அதிகபட்ச தண்டனையில் பாதி காலம் சிறையில் இருந்திருந்தால், நீதிமன்றம் ஜாமினில் விடுவிக்க முடியும். ஒருவேளை, வழக்கில் தண்டனை நிரூபிக்கப்பட்டால், ஏற்கனவே சிறையில் இருந்த காலத்தைப்போக எஞ்சிய தண்டனையை அனுபவிக்க நேரிடும்.

**ஜாமீனில் வெளிவரமுடியாத குற்றத்தை செய்திருந்தால், ஜாமீன் கிடைக்குமா?**

கிடைக்கும். ஜாமீனில் வெளிவரமுடியாத வழக்குகளில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு ஜாமீனில் வெளிவருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. குற்றம்சாட்டப்பட்டவர் செய்த குற்றத்தின் தீவிரத்தைப் பொறுத்து நீதிமன்றம் முடிவெடுக்கும். அமர்வு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் ஜாமீன் வழங்க முடியும்.

**ஜாமீன் கிடைக்கக்கூடிய வழக்குகளில் ஜாமீனுக்கு முறையிட வேண்டுமா?**

ஜாமீன் வழங்கக்கூடிய வழக்கு என்றாலும், குற்றம்சாட்டப்பட்டவர் ஜாமீன்கேட்டு முறையிட வேண்டும். ஜாமீன் வழங்கக்கூடிய வழக்காக இருந்தால், குற்றம்சாட்டப்பவர் நீதிமன்றத்தை அணுக தேவையில்லை. காவல்துறை அதிகாரியே ஜாமீன் வழங்கலாம்.





**ஜாமீன் எப்போது வழங்கப்படாது?**

தூக்கு தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை விதிக்கப்படக்கூடிய வழக்குகளில் கைது செய்யப்பட்டு, குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக போதுமான ஆதாரம் இருந்தால் ஜாமீன் வழங்கப்படாது. குற்றம்சாட்டபட்டவர் வெளியே சென்றால், வழக்கு தொடர்ந்தவருக்கு ஆபத்து விளைவிப்பார், சாட்சிகளை கலைத்துவிடுவார் என்ற நிலை இருந்தால், ஏற்கனவே ஏதேனும் ஒரு வழக்கில் தூக்குதண்டனை அல்லது ஆயுள் தண்டனை பெற்றிருந்தால், 7 ஆண்டுகள் அதற்கும் மேலாக சிறை தண்டனை அனுபவித்திருந்தால், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குற்றங்களில் ஏற்கனவே தண்டிக்கப்பட்டிருந்தால் ஜாமீன் வழங்கப்படாது.

**ஜாமீன் ரத்து:**

ஜாமீனை எந்த நேரமும் ரத்து செய்வதற்கான அதிகாரம் நீதிமன்றத்திடம் உள்ளது. ஜாமீன் பெற்றவர் வழக்கில் இருந்து விடுதலை அடைந்ததுபோல் நடந்து கொள்ளக்கூடாது. வழக்கு தொடர்ந்தவரை மிரட்டுவது, சாட்சிகளை கலைப்பது அல்லது அச்சுறுத்துவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டால், ஜாமின் ரத்து செய்யப்படும். குற்றவியல் சட்டப்பிரிவு 437(5), 439(2) ஆகிய பிரிவுகளின்படி ஜாமீனை ரத்து செய்து, குற்றம்சாட்டப்பட்டவரை கைது செய்ய காவல்துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட முடியும்.

**- டி.எஸ்.கவின், பண்ருட்டி**

# கோகிலா இல்லை கோகிலம்

மித்ரா கதைக்குழு

சிறுகதை

நெஞ்சை நெகிழ வைத்த கதை!

அந்தப் பெண்ணைச் சமையல் வேலைக்கு வைத்துக் கொள்ளும்படியாக டாக்டரின் மனைவி வித்யா தான் சிபாரிசு செய்திருந்தாள். வித்யாவிற்கு அவளை எப்படி தெரியும் என தெரியவில்லை. வாசல்கதவை ஒட்டி நின்றிருந்த அந்தப் பெண்ணிற்கு ஐம்பது வயதிருக்கக் கூடும். ஆனால் தோற்றம் நடுத்தர வயது பெண்ணைப் போலவே இருந்தது. மெலிந்திருந்த போதும் களையான முகம். நீண்ட கூந்தல். கவலை படிந்த கண்கள். அந்தப் பெண்ணின் கையில் துணிப்பை ஒன்றிருந்தது.



உன் பேரு என்னம்மா எனக்கேட்டேன். கோகிலம் என்றாள்.

கோகிலாவா என மறுபடியும் கேட்டேன்.

இல்லை சார் கோகிலம் என அழுத்தமாகச் சொன்னாள். இப்படி ஒரு பெயரை முதன்முறையாக இப்போதுதான் கேட்கிறேன்.

எந்த ஊர் எனக்கேட்டேன்.

தெக்கே சார். பிள்ளைகுட்டிகள் யாருமில்லை. புருஷன் செத்துப் போயிட்டார். இரண்டு வருசமா தாம்பரத்துல ஒரு வீட்ல வேலைக்கு இருந்தேன். அவங்க இப்போது துபாய்க்கு வேலை மாறிப்போயிட்டாங்க. என்றாள்

எவ்வளவு சம்பளம் எதிர்பார்க்குறே ?

நீங்க குடுக்குறதை குடுங்க. ஆனா தங்க இடமும் சாப்பாடும் தரணும்.

இதுவரை எந்த வேலைக்காரியையும் என் வீட்டோடு தங்கியதில்லை. அப்படித் தங்கிக் கொள்ளும்படியான தனியாக அறை எதுவும் எனது வீட்டில் இல்லை. வீடு சின்னது, இதுல நீ எங்கம்மா தங்குவே எனக்கேட்டேன்

கிச்சன்லயே படுத்துகிடுவேன். இந்தப் பையை வைக்க இடம் இருந்தா போதும் என்றாள்.

அவள் குரலில் இருந்த துயரம் அவளது இயலாமையைத் துல்லியமாக வெளிப்படுத்தியது.

என் மனைவியும் அவளிடம் ஏதேதோ கேள்விகள் கேட்டாள். முடிவில் அவளைச் சமையல் வேலைக்கு வைத்துக் கொள்வது என முடிவானது.

சாப்பாட்டின் ருசி என்பது வீட்டுக்கு ஒரு மாதிரியானது. அதுவும் பல ஆண்டுகளாக ருசித்துப் பழகிவிட்டால் வேற்று ஆளின் சமையலை சாப்பிட முடியாது. என் மனைவி மிகவும் நன்றாகச் சமைப்பாள். ஆகவே புதிய சமையற்காரியின் சாப்பாட்டினை எப்படிச் சாப்பிடுவது என யோசனையாக இருந்தது. ஆனால் என் மனைவி கால்முறிவு ஏற்பட்டுப் படுக்கையில் கிடந்து இப்போது தான் தேறி வருகிறாள். ஆகவே புதிதாகச் சமையலுக்கு ஆள் வைத்துக் கொள்ள வேண்டிய தேவை உருவாகியது.

கோகிலம் சமைக்கத் துவங்கிய முதல்நாள் அவள் போட்டுக் கொடுத்த காபி. செய்து வைத்த சட்னி, சாம்பார் எதுவும் எனக்குப் பிடிக்கவில்லை. என் மனைவி அவளைக் கோபத்தில் திட்டவே செய்தாள்.

மறுநாள் கோகிலம் சமைத்த போது முட்டைக்கோஸ் வேகவைத்த வாணலி கருகிப்போய்விட்டது.

அடுப்பை கவனிக்காமல் என்னடி யோசனை என என் மனைவி அவளிடம் சண்டையிட்டாள்.

இல்லம்மா. என்னை அறியாமல் ஏதோ நினைப்பு வந்துருது. அந்த நினைப்பு வந்தவுடன் அழுகை அழுகையாக வருது என்றாள் கோகிலம்.

நீ ஒப்பாரி வைக்கிறதுக்கு என் வீடு தானா கிடைச்சது.

கவனமா வேலை பாக்குறதா இருந்த இரு. இல்லே வேற வீடு பாத்துக்கோ என என் மனைவி அவளை விரட்டினாள்.

கோகிலம் சேலை முந்தானையால் அழுகையைத் துடைத்தபடியே சரிம்மா என்று கரிபிடித்த வாணலி கிழே இறக்கிவைத்தாள்.

கோகிலம் எப்போது சாப்பிடுவாள். எப்போது குளிப்பாள் என யாருக்கும் தெரியாது. நாங்கள் எழுந்து கொள்வதற்கு முன்பாக அவள் குளித்துத் தயராகிக் காபி டிக்காஷனை போட்டு வைத்திருப்பாள். சமையற்கட்டின் ஒரத்தில் எதையும் விரித்துக் கொள்ளாமல் வெறும் தரையில் தான் படுத்துக் கொள்வாள். சமையல் வேலையில்லாத நேரங்களில் டிவி பார்ப்பதோ, அரட்டை அடிப்பதோ எதுவும் கிடையாது. அவளாகவே கடைக்குச் சென்று காய்கறிகள் வாங்கி வருவாள். பைசா சுத்தமாகச் சில்லறை மீதம் தந்துவிடுவாள். சமையல் வேலைகள் தவிர்த்து வீட்டை சுத்தம் செய்வது. பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவது. படுக்கை விரிப்புகளைச் சுத்தம் செய்வது. செருப்பைக் கழுவி துடைத்து வைப்பது எனச் சகல காரியங்களையும் கர்ம சிரத்தையாகச் செய்து கொண்டிருந்தாள்.

பத்து நாளில் அவளது சாப்பாடு எங்களுக்குப் பிடித்துப் போகத் துவங்கியது. வீட்டில் நானும் என் மனைவியும் மட்டுமே இருந்தோம். மூத்தமகன் மும்பையில் தன் மனைவி பிள்ளைகளுடன் இருந்தான். இளைய மகள் டெல்லியில் வசித்து வந்தாள். அவர்கள் விடுமுறைக்கு வருவதோடு சரி. நான் வங்கிப்பணியில் ஒய்வு பெற்றவன் என்பதால் அடிக்கடி நண்பர்கள் என்னைப் பார்க்க வீடு தேடி வருவதுண்டு. அப்படி ஒருமுறை நாலைந்து நண்பர்கள் வந்திருந்த போது கோகிலம் கேரட் அல்வா செய்திருந்தாள்.

அப்படி ஒரு சுவையான அல்வாயை சாப்பிட்டதேயில்லை என நண்பர்கள் புகழாரம் செய்தார்கள். அல்வா எடுத்த ஸ்பூனை வழித்துத் தின்றான் ஒரு நண்பன்.

கோகிலம் அந்தப் பாராட்டுகளைக் கேட்டுக் கொண்டதோடு சரி. அதை நினைத்து பெருமைப்பட்டதாகவோ, சந்தோஷம் கொண்டதாகவோ தெரியவில்லை. விதவிதமான சிற்றுண்டிகள், காய்கறி வகைகள், துவையல்கள், இனிப்பு வகைகள் எனச் செய்து கொடுத்தபடியே இருந்தாள். மாத சம்பளத்தை அவளிடம் தந்த போது நீங்களே வைத்துக் கொள்ளுங்கள், தேவைப்படும்போது வாங்கிக் கொள்கிறேன் என்றாள்

உண்மையில் அவள் வந்த ஒரு மாத காலத்தில் நானும் என் மனைவியும் ஒரு கிலோ எடை அதிகமாகியிருந்தோம். கோகிலம் என் மனைவியின் தங்கையைப் போலவே ஆகியிருந்தாள். ஒரு நாளில் ஆயிரம் முறை கோகிலம், கோகிலம் என என் மனைவி அவளை அழைத்தபடியே இருந்தாள். அவளும் சுணக்கமின்றி ஒடியோடி வந்து உதவிகள் செய்தாள்.

சில நேரம் நாங்கள் சினிமாவிற்குப் போகும்போது அவள் வீட்டில் தனியாக இருப்பாள். ஒருமுறை நாங்கள் திருப்பதி போய்வந்த போது இரண்டு நாட்கள் அவள் மட்டுமே வீட்டிலிருந்தாள். வீடே காலியாக இருந்தாலும் அவள் சமையற்கட்டில் தான் உறங்கினாள். ஒரு பைசாவை எடுத்து செலவழிக்கவில்லை. சுவையான எந்த உணவையும் சாப்பிடுவதில்லை.

ஒருமுறை கோகிலம் சாப்பிடும் போது மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தேன்.



வெறும்சோறு. அதில் கொஞ்சம் தண்ணீர். தொட்டுக் கொள்ள ஊறுகாய்.

ஏன் இந்தப்பெண் இப்படிப் பிடிவாதமாகயிருக்கிறாள் என ஆத்திரமாக வந்தது. என் மனைவியிடம் சொல்லி அவள் விரும்பியதை சாப்பிடும்படியாகச் சொன்னேன். அதைக்கேட்டு என் மனைவி சொன்னாள்

நானும் சொல்லிப்பார்த்துட்டேன். அவ கேட்கமாட்டாள்.

மும்பையில் இருந்து என் மகனும் மருமகளும் பேரப்பிள்ளைகளும் வந்திருந்த போது கோகிலத்தின் விருந்தை சாப்பிட்டு மயங்கிப் போனார்கள். தன்னோடு அவளை மும்பைக்கு அழைத்துப் போய்விடுகிறேன் என மகன் சொல்லிக் கொண்டேயிருந்தான். மருமகளும் கூடக் கூப்பிட்டாள். ஆனால் கோகிலம் மறுத்துவிட்டாள். கோகிலம் எதற்கும் ஆசைப்படவில்லை. பூ வைத்துக் கொள்ளக் கூட அவள் விரும்பியதில்லை.

கோகிலத்திற்காக நாங்கள் வாங்கிக் கொடுத்த புடவைகள் எதையும் அவள் கட்டிக் கொள்ளவில்லை. அப்படியே ஒரு பையில் போட்டு வைத்திருந்தாள். ஒரு நாள் கூட உடல்நலமில்லாமல் ஒய்வெடுக்கவோ, சலித்துக் கொள்ளவோயில்லை.

கோகிலத்தின் வேலை பிடித்துப்போகவே அவளுக்கு மாத சம்பளம் ஆறாயிரத்திலிருந்து எட்டாயிரம் தரலாம் என்ற யோசனையை என் மனைவிதான் சொன்னாள். அதைப்பற்றி அவளிடம் சொன்ன போது உங்க இஷ்டம் என்று மட்டும் தான் சொன்னாள்

என்ன பெண்ணிவள். எதற்காக இப்படிப் பகலிரவாக வேலை செய்கிறாள். சம்பளத்தைப் பற்றிப் பெரிதாக நினைப்பதேயில்லை. யாரைப்பற்றியும் ஒரு வார்த்தை தவறாகப் பேசியதில்லை. தன் கஷ்டங்களைச் சொல்லி புலம்பியதில்லை. இவளைப் போல வேலையாள் கிடைப்பது கஷ்டம் என நினைத்துக் கொண்டேன்.

ஒரு நாள் கோகிலம் என்னிடம் தயக்கத்துடன் கேட்டாள்

நாளைக்குக் காலையில பூந்தமல்லி வரைக்குப் போயிட்டு வரணும். அரை நாள் லீவு வேணும் சார்.

என்ன வேலை என்று கேட்டேன்.

பதில் சொல்லவில்லை. பேசாமல் நின்று கொண்டிருந்தாள்.

சரி போயிட்டு வா என்றேன்.

டிபன் செஞ்சிடும் போதே மதிய சமையலும் சேத்து வச்சிட்டு போயிடுறேன். வர்றதுக்கு மூணு மணி ஆகிடும் என்றாள்.

அதையெல்லாம் நாங்க பாத்துகறோம். நீ போயிட்டு வா.

அம்மாவுக்குத் தைலம் தேய்ச்சி குளிக்க வைக்கணும். அதைச் சாயங்காலம் செய்துரலாம்.

அதெல்லாம் பிரச்சனையே இல்லை கோகிலம் என அனுப்பி வைத்தேன். அவள் மறுநாள் காலை எட்டுமணிக்கு வெளியே கிளம்பி போனாள். என் வீட்டிற்கு வந்த ஆறுமாதங்களில் முதன்முறையாக அப்போது தான் வெளியே கிளம்பி போயிருக்கிறாள்.

யாரைப்பார்க்க போகிறாள். என்ன வேலையாக இருக்கும். என யோசித்துக் கொண்டேயிருந்தேன்.

என் மனைவி, கோகிலம் சில சமயம் காசை முடிந்து வைத்து சாமி கும்பிடுவதைக் கண்டிருப்பதையும். ஒருவேளை கோவிலுக்குப் போய்வரக்கூடும் என்றும் சொன்னாள்.

கோவிலுக்குப் போவதற்குச் சொல்லிக் கொண்டு போகலாம் தானே என்று கேட்டேன். அது அவ சுபாவம். எதையும் யார்கிட்டயும் சொல்லமாட்டா எனச் சிரித்தாள் மனைவி.

அன்று மாலை கோகிலம் நாலு மணிக்கு திரும்பி வந்தாள். அவள் முகம் இறுகிப்போயிருந்தது. தன்னை நம்பியவர்களை அப்படியே விட்டுவிட்டு போய்விட்டோம் என்பது போல அவள் மன்னிப்பு கேட்டுக் கொண்டாள். வந்த வேகத்தில் அடுப்பை பற்றவைத்து சுவையான உளுந்துவடையும் காபியும் கொடுத்தாள். எங்கே போனாள் யாரை பார்த்து வந்தாள் என எதையும் சொல்லிக் கொள்ளவில்லை

மறுநாள் என் மனைவி சொன்னாள் கோகிலம் ராத்திரி பூரா அழுதுகிட்டே இருந்தா. கேட்டா ஒண்ணுமில்லேங்கிறா.

யாராவது செத்துப் போயிருப்பாங்களா எனக்கேட்டேன்.

தெரியலை. ஆனா அவளைப் பாக்க பாவமா இருக்கு.

கோகிலம் மறுநாள் முதல் இயல்பாகிப் போனாள். நாங்கள் எதையும் கேட்டுக் கொள்ளவில்லை. பத்துநாட்களுக்குப் பிறகு ஒரு மதியம் காலிங் பெல் அடிக்கும் சப்தம் கேட்டு நான் கதவை திறந்தேன். வாசலில் முப்பது வயதுள்ள ஒரு ஆள் நின்று கொண்டிருந்தான்

என்ன வேணும் எனக்கேட்டேன்.

எங்க அம்மாவை பாக்கணும் என்றான்.

உங்க அம்மாவா. யாரு எனக்கேட்டேன்.

கோகிலம் என்றான்

கோகிலத்திற்கு யாருமில்லை என்றாளே என்ற குழப்பத்துடன் சமையலறைக்குப் போய் அவளை அழைத்தேன். வெளியே வந்தவளின் முகம் அவனைப் பார்த்தவுடன் மாறியது.

இங்க எதுக்கு வந்தே எனக்கேட்டாள்.

உன்னை யாரு இங்க வந்து வீட்டுவேலை செய்யச் சொல்லி கட்டாயப்படுத்தினா. உன் தலைவிதியா எனக்கேட்டான் அந்தப் பையன்.

நான் உழைச்சி சாப்பிடுறேன். உன்னை என்னடா பண்ணுது. அதான் எல்லாத்தையும் குடுத்துட்டேனே. இன்னும் என்ன வேணும் என முறைத்தபடியே கேட்டாள்.

யம்மா. நான் செஞ்சது தப்பு தான். அதுக்காக நீ யாரோ வீட்ல வந்து எதுக்கு வேலை செய்ற. சும்மா உட்கார்ந்து சாப்பிட்டா கூட முப்பது வருஷம் சாப்பிடலாம். சொத்த வித்த பங்குல உனக்குச் சேர வேண்டியது இரண்டு கோடி வந்துருக்கு. அது உனக்குத் தான். அது ஒண்ணும் என் பணமில்லை. காசு காசுனு நீ தானே அலையுறே. நீயே வச்சி அனுபவி என்றாள் கோகிலம்.

உனக்கு வேணாம்னா போ. ஆனா நாளைக்கு உனக்கு ஏதாவது ஒண்ணுன்னா கொள்ளி போட நான் தான் வந்தாகணும். அதை மறந்துராத என்றான் மகன்.

ஏன் நான் செத்தா இவங்க எடுத்து போட மாட்டாங்களா எனக்கேட்டாள்.

அதைக் கேட்டதும் எனக்குச் சிலீர் என்றது. அந்தப் பையன் சொன்னான்.

உனக்குக் காசோட அருமை தெரியலை. இரண்டு கோடியை வேணாம்னு சொல்லுறே, பெத்த தாயேன்னு தான் திரும்ப வந்து நீயே வச்சிக்கோனு குடுக்குறேன். வேற யாராவது இருந்தா முழுங்கி ஏப்பம் விட்ருப்பான்.

நீயும் வேணாம். உன் கோடி ரூபாயும் வேணாம். கிளம்பு. இனிமே என்னைத் தேடிகிட்டு இங்க வந்தா செருப்பாலே அடிப்பேன். போடா எனச் சொல்லிவிட்டு சமையல் அறைக்குள் போய்விட்டாள். அந்தப் பையன் என்னை முறைத்தபடியே வெளியே போனான். கோகிலம் பேசியதை எல்லாம் கேட்டதும் எனக்குத் திகைப்பாக இருந்தது. கோகிலம் வெறும் வேலைக்காரியில்லை. இரண்டு கோடி பணமுள்ளவள். அதை விடவும் வசதியாக வாழ்ந்தவள். ஏதோ ஒரு பிடிவாதம் காரணமாக வீட்டை விட்டு வெளியேறி வந்து வேலைக்காரியாக இருக்கிறாள்.

கோகிலத்திடம் நாங்கள் எதையும் கேட்டுக் கொள்ளவில்லை. ஆனால் அன்றிரவு அவளாகவே வந்து சொன்னாள்

எங்க வீட்டுக்காரு பெரிய டிராவல்ஸ் வச்சிருந்தாரு.



பூந்தமல்லியில பெரிய வீடு. நாலு கார் இருந்துச்சி. நல்லா சம்பாதிச்சி மெயின்ரோட்ல ஒரு கல்யாண மண்டபம் கட்டி வாடகைக்கு விட்டிருந்தாரு. பம்மல்ல இரண்டு ஏக்கர் விவசாய நிலமும் இருந்துச்சி.எங்க வீட்லயும் ரெண்டு பேரு வேலைக்காரிகள் இருந்தாங்க. எங்க வீட்டுக்காரருக்கு தினமும் சாப்பாடு ருசியா இருக்கணும். விதவிதமா ஆக்கி போடுவேன்.

திடீர்னு ஒரு நாள் பெங்களூர் போயிட்டு வந்துகிட்டு இருந்த என் புருஷன் ரோடு ஆக்சிடெண்டில் செத்துப்போயிட்டாரு. கண்ணைக் கட்டி காட்டுல விட்டது மாதிரி ஆகிருச்சி. என் மகனே என்னை ஏமாத்த ஆரம்பிச்சிட்டான். அவனுக்குச் சேர்க்கை சரியில்லை. ஒரு வருசத்துக்குள்ளே ஊர்பட்ட கடன். அவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வச்சேன். வந்தவ இன்னும் மோசம். ரெண்டு பேரும் சேந்துகிட்டு என்னை வீட்டை விட்டு துரத்தி அடிச்சிட்டாங்க.

அப்புறம் வீட்டுவேலை செய்து பிழைச்சிகிட்டு இருக்கேன். எப்படி வாழ்ந்த நாம இப்படி ஆகிட்டோம்னு நினைச்சி தான் வெறும் சோத்தை சாப்பிடுறேன். அதுலயும் உப்புப் போடுறது கிடையாது.

பெத்து வளர்ந்த மகனேஅடிச்சி விரட்டிட்டான். ஆனாலும் மனசு கேட்க மாட்டேங்குது. அவன் நல்லா இருக்கணும்னு காசு முடிச்சி போட்டு சாமி கும்பிட்டுகிடுவேன். எனக்குன்னு யாருமேயில்லை. அதான் இருக்கிற காலத்தை உங்கள மாதிரி யார் வீட்லயாவது ஓடிட்டு முடிச்சிரலாம்னு நினைச்சிட்டு இருந்தேன். முந்தநாள் பஜார்ல என் மகனை பார்த்தேன். கல்யாண மண்டபத்தை விக்கப் போறேன். உன் கையெழுத்து வேணும். பத்திர ஆபீஸ்க்கு வந்துருனு சொன்னான். அதைப் போட தான் நேத்து போனேன். எட்டு கோடி ரூபாய் வந்துச்சி. அதுல என் பங்கு ரெண்டு கோடி வச்சிக்கோனு குடுத்தான். உன் பிச்ச காசு எனக்கு வேணாம் போனு உதறிட்டு வந்துட்டேன். நான் செஞ்சது சரி தானே சார். எனக்கு அவள் பேசியதை கேட்க கேட்க மனதில் பாரமேறியது. தொண்டை வலித்தது.

இதை முன்னாடியே சொல்லியிருக்கலாம்லே.

வசதியா இருந்த ஆளை யாரு வேலைக்கு வச்சிகிடுவா?

அதுக்கா ஏன் வீட்டுவேலை செய்து கஷ்டப்படுறே. அந்தப் பணத்தை வாங்கிப் பேங்கிலப் போட்டுட்டு காலாட்டிகிட்டு வாழலாம்லே எனக்கேட்டாள் என் மனைவி.

நம்மாலே அப்படி வாழ முடியாதும்மா. நமக்கெல்லாம் உழைச்சி சாப்பிடணும். அது அநாமத்தா வந்த பணம். அதை வச்சிருந்தா ஆயிரம் பிரச்சனை கூட வரும். அந்தக் கருமம் எனக்கு வேணாம். சோறு போடுறதுக்கு நீங்க இருக்கீங்க. படுக்க இடம் இருக்கு இது போதும்மா.

அவள் சொல்வது உண்மை. ஆனால் இவளை போன்ற துணிவும் மனவுறுதியும் எங்களுக்கு இருக்குமா என யோசனையாக இருந்தது. என் மனைவி அவளிடம் திரும்பத் திரும்பப் பணம் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். கோகிலம் அது தன்னுடைய பணமில்லை. தன்னைப் பெற்ற மகனே ஏமாற்றியபிறகு யாரையும் நம்பத் தயாராகயில்லை" என உறுதியாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

சரி அவள் இஷ்டம். எப்போதும் போல அவள் இந்த வீட்ல் இருக்கலாம். இனி அவளுக்கு எந்த ஆலோசனையும் சொல்ல மாட்டோம் என நாங்கள் முடிவு செய்தோம்.



மறுநாள் விடிகாலையில் நாங்கள் எழுந்து வந்த போது கோகிலம் சமையல் அறையில் இல்லை. சிறிய கடிதம் மட்டுமே இருந்தது. அன்பு மிக்க நடராஜன் அய்யா, அம்மாவிற்கு,

இத்தனை நாட்கள் எனக்குச் சாப்பாடு போட்டு தங்க இடம் கொடுத்ததிற்கு நன்றி. நான் யார் என்று தெரிந்தபிறகு முன்பு போல என்னை வேலை சொல்ல உங்களுக்கு மனம் வராது. ஒவ்வொரு முறை என்னைப் பார்க்கும் போதும் இரண்டு கோடி ரூபாய் உங்கள் நினைவில் வந்து போகும். அது எனக்கும் சிரமம். உங்களுக்கும் சிரமம். ஆகவே வேறு ஊருக்கு வேலைக்குப் போகிறேன். இதுவரை நீங்கள் சேர்த்து வைத்துள்ள என் சம்பள பணத்தை அம்பத்தூரில் உள்ள அநாதை காப்பகத்திற்குக் கொடுத்துவிடவும். அம்மாவிற்குத் தைலம் தேய்த்துவிட முடியாமல் போய்விடுகிறதே என்று மட்டும் தான் எனக்குக் கவலை. என் சாப்பாடு உங்கள் இருவருக்கும் பிடிந்திருந்தது என்பது மகிழ்ச்சி. பலசரக்கு கடைக்காரன் 26 ரூபாய் பாக்கி தர வேண்டும். பால் பாக்கெட் ஒன்று கூடுதலாகப் போட வேண்டும். உங்கள் இருவரின் நினைவாக ஒரேயொரு டம்ளரை எடுத்துப் போகிறேன். அதில் தண்ணீர் குடிக்கும் போதெல்லாம் உங்களை நினைத்துக்கொள்வேன். இப்படிக்கு உங்கள் வேலைக்காரி கோகிலம் என எழுதியிருந்தாள்.

அந்தக் கடிதத்தைப் படித்து முடிந்தவுடன் வேதனை பீறிட்டது. என் மனைவி படித்துவிட்டு வாய்விட்டு அரற்றினாள்.

நமக்கு தான் புத்தியில்லை. ஆள பாத்து தப்பா எடைபோட்டுட்டோம். விதவிதமா நமக்குச் சமைச்சி போட்டு கவனிச்சிட்டா. அவளுக்கு நாம ஒண்ணுமே பண்ணலே. இந்தப் பாவத்துக்கு என்ன பரிகாரம் பண்ணப்போறோம் சொல்லுங்க.

எனக்கும் என்ன செய்வதெனத் தெரியவில்லை

சமையல்கட்டின் ஓரம் நாங்கள் கொடுத்த புதுப்புடவைகள் அத்தனையும் ஒரு பையில் அப்படியே இருந்தன. அதைக் கையில் எடுத்துப் பார்த்தபோது என் மனைவி வெடித்து அழத் துவங்கியிருந்தாள்.

படித்து நெகிழ்ந்த கதை............

# எம் பதில்கள்

**இந்தியாவில் கோயில் பிரசாதமாக தங்கம் வழங்கப்படுகிறதாமே?**

கோவில் என்றாலே நம் எல்லோருக்கும் மிகவும் பிடித்த மற்றொரு விஷயம் பிரசாதம்தான். நாம் பல கோயில்களுக்குச் சென்று வந்திருப்போம். அதில் பெருமாள் கோயிலில் குங்குமம், துளசி, போன்ற பிரசாதங்களோடு, ஏதேனும் ஒரு உணவு பிரசாதமாக வழங்கப்படுவது வழக்கம். இவ்வாறு வழங்கும் பிரசாதம் கடவுளுக்கு நிவேதனம் செய்தவை. அதனால் அதனை சிறிதளவுவாவது சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் நம் அனைவருக்கும் இருக்கும்.



ஆனால் இவற்றில் மிகவும் ஆச்சரியப்படுத்தும் விதமாக ஒரு கோயிலில் பிரசாதமாக தங்கம், வெள்ளி வழங்கப்படுகிறது. தங்கத்தை பிரசாதமாக வழங்கும் கோயில், மத்திய பிரதேசம் மாநிலத்டின் வட மேற்கு பகுதியில் இருக்கும் ரத்லா என அழைக்கப்படும் ரத்ன புரி நகரத்தில் உள்ள மகா லட்சுமி கோயிலில் தான் தங்கத்தைப் பிரசாதமாக வழங்கி வருகின்றனர்.

மேலும் இந்த கோயிலுக்கு வந்து மகாலட்சுமி தேவியை வழிபட்டு செல்லும் பக்தர்கள், தங்களின் கோரிக்கை நிறைவேறினால், நேர்த்திக்கடனாகப் பணம் அல்லது பொருளுக்கு பதிலாக தங்கம் அல்லது வெள்ளியை காணிக்கையாக வழங்குகின்றனர். இப்படி பக்தர்கள் வழங்கும் தங்கம் மற்றும் வெள்ளி மலை போல் கோயிலில் குவிந்து கிடக்கிறது.

ஆண்டு முழுவதும் காணிக்கையாக சேரும் தங்கம், வெள்ளி ஆகியவற்றை அனைத்து கோயில்களிலும் கோயில் திருப்பணிக்காக பயன்படுத்துவது வழக்கம். ஆனால் இந்த கோயிலில் ஆண்டு தோறும் தீபாவளி தினத்தன்று இந்த கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு பிரசாதகமாக வழங்குகின்றனர். அதுமட்டுமல்லாமல் இந்த கோயிலில் தரப்படும் இந்த பிரசாதத்தை யாரும் விற்பனை செய்வது இல்லை. அது இறைவனால் வழங்கப்பட்டதாக நினைத்து வைத்து பூஜிக்கின்றனர்.

**ரஜினிக்கு என்னாச்சு?**

ரஜினிகாந்த் அவர்கள் உடல்நலக்குறைவால் சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள காவிரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ரஜினிகாந்தை பரிசோதித்த மருத்துவர்கள் ரஜினிகாந்த் கழுத்து பகுதியில் ரத்த நாளங்களில் பிரச்சனை இருப்பதால் அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப் பட்டிருந்தது.

அறுவை சிகிச்சைக்கு பிறகு இவருக்கு மீண்டும் பரிசோதனை செய்தார்கள். அப்போது ரஜினியின் உடல்நிலை சீராக இருப்பதாகவும் தற்போது ரஜினியின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் மருத்துவர்கள்



தெரிவித்து இருந்தார்கள்.

இதனையடுத்து பிரபலங்களும், ரசிகர்களும் ரஜினிகாந்த் குணமடைந்து வரவேண்டுமென்று பிரார்த்தனை செய்து வருகிறார்கள். இந்த நிலையில் ரஜினிகாந்தின் உடல்நிலை எப்படி உள்ளது என்பதை விசாரிப்பதற்காக தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலின் காவிரி மருத்துவமனைக்கு சென்று நலம் விசாரித்துள்ளார். சமீபத்தில் டெல்லி சென்று தாதா சாகிப் பால்கே விருது வந்தார்.திரு.ரஜினிகாந்த் நலம் பெற்று வாழ மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துகிறோம்.

**1ம் வகுப்பு மாணவர்களுக்கு பள்ளி திறக்கப்பட்டுள்ளதே?**

கொரோனாவின் கோரத்தாண்டவத்தால் தமிழகம் மட்டுமின்றி நாடு முழுவதும் பள்ளிகள் மூடப்பட்டன. இதனால், கடந்த 19 மாதங்களாக பள்ளிகள் திறக்கப்படாமல் இருந்தது. கடந்த சில நாட்களாக கொரோனா தொற்றின் எண்ணிக்கை குறைந்து வருவதை அடுத்து, நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் பள்ளிகள் திறக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், தமிழகத்தில் ஏற்கனவே 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்புகளுக்கு நேரடி வகுப்புகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து, 1ம் வகுப்பு முதல் 8ம் வகுப்புகளுக்கு நவம்பர் 1ம் தேதி முதல் திறக்கப்படும் என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவித்திருந்தார்.

அதன்படி கொரோனா நெறிமுறைகளுடன் இன்று முதல் 1ம் வகுப்பு முதல் 8ம் வகுப்புகள் வரை பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. பள்ளிகளுக்கு வரும் மாணவ மாணவிகளை ஆசியர்கள் பூக்கள் கொடுத்தும், சாக்லெட் வழங்கியும் வரவேற்றனர். மாணவர்கள் மாணவிகளும் உற்சாகத்துடன் வகுப்பறைக்குள் சென்றனர்.





பள்ளிகளின் வாசலிலேயே காய்ச்சல் சோதனை செய்யப்பட்டு, கைகள் சுத்தம் செய்த பிறகு, முகக்கவசம், கையுறைகள் வழங்கப்பட்டு பின் மாணவர்களை வகுப்புகளுக்குள் அனுமதித்தனர். வகுப்பறைக்குள் சமூக இடைவெளியைப் பின்பற்றி மாணவர்களை அமர வைத்துள்ளனர்.

சில பள்ளிகளில், மாணவர்களுக்கு கொரோனா தொற்று குறித்தும், கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நெறிமுறைகள் குறித்தும் பள்ளிகள் சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளன. பள்ளிகளில் அதிக எண்ணிக்கையில் மாணவ மாணவிகள் பள்ளிகளுக்கு வருவார்கள் என்பதால் சுழற்சி முறையில் வகுப்புகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளன.

**இல்லம் தேடி கல்வி திட்டம் பற்றி....**

கொரோனா பாதிப்பு காரணமாகக் கடந்த 1.5 ஆண்டுகளாகவே மாணவர்களுக்கு ஆன்லைன் மூலமே பாடங்கள் கற்பிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை சார்பில் இல்லம் தேடி கல்வி என்ற திட்டம் தொடங்கப்பட்டு இருக்கிறது.

முதல்கட்டமாகக் காஞ்சிபுரம், விழுப்புரம், மதுரை, திருச்சி, நாகப்பட்டினம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, நீலகிரி உள்பட 12 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்காக ரூ 200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. "இல்லம் தேடி கல்வி" பணியில் ஈடுபட உள்ள தன்னார்வலர்கள், தினமும் ஒன்று முதல் ஒன்ற மணிநேரம் ஆடல், பாடல், நாடகம், பொம்மலாட்டம் எனப் புதுமையான முறையில் பாடங்களைச் சொல்லிக் கொடுக்க உள்ளனர்.

இல்லம் தேடி கல்வித் திட்டத்திற்குச் சிறப்பு அதிகாரியாக இளம்பகவத் ஐஏஎஸ் அதிகாரியை நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது



# தீபாவளி ஸ்பெஷல்:

# மில்க் மைசூர் பாக்

மித்ரா கிட்சன்

**தேவையான பொருட்கள்:**

*1: மைதா மாவு –200 கிராம்*

*2: பால் பவுடர் – 150 கிராம்*

*3: நெய் – 750 கிராம்*

*4: சர்க்கரை – 750 கிராம்*

*5: ஏலக்காய் பொடி –சிறிதளவு*



***செய்முறை:*** *முதலில் ஒரு கிண்ணத்தில் 200 கிராம் மைதா மாவு, 150 கிராம் பால் பவுடர், 400 கிராம் நெய் சேர்த்து ஒன்றாக கலந்து வைத்துக் கொள்ளவும். பிறகு அடுப்பில் ஒரு கடாய் வைத்து 750 கிராம் சர்க்கரையுடன் இரண்டு டம்ளர் தண்ணீர் சேர்த்து நன்றாக கலக்கவும். ஒரு கம்பி பதம் வரும் அளவுக்கு பாகு எடுத்து வைத்துக் கொள்ளவும். பிறகு நாம் கலந்து வைத்துள்ள மைதா, பால் பவுடர் கலவையை சர்க்கரைப் பாகுடன் சேர்த்து ஒன்றாக கலக்கவும். பிறகு சிறிதளவு ஏலக்காய் பொடி மற்றும் கொஞ்சம் கொஞ்சமாக மீதமுள்ள 350 கிராம் நெய் சேர்த்து நன்றாக கலக்கவும். பிறகு கெட்டிப்பதம் வந்தவுடன் ஒரு நெய் தடவிய தட்டில் ஊற்றிக் கொள்ளவும். 1 மணி நேரம் கழித்து கெட்டி ஆனவுடன் செவ்வக வடிவத்தில் கட் செய்து கொள்ளவும். இப்பொழுது டேஸ்டியான, சூப்பரான மில்க் மைசூர் பாக் ரெடி.*





**S. கவிதா,**
**சிட்லபாக்கம்**



# யார் பணக்காரர்?

பணத்துக்கும் சந்தோஷத்துக்கும் தொடர்பில்லை. உற்று நோக்குங்கள்.

ஒரு மிகப் பெரிய பணக்கார்களிடம் கவலையும், பயமும் உங்களை விட அதிகமாகவே இருக்கும்.

ஓஷோ.

பணக்காரர்கள் சிரித்துக்கொண்டே இருப்பதுமில்லை, ஏழைகள் அழுது கொண்டே இருப்பதுமில்லை. சந்தோஷம் என்பது நீங்கள் வாழும் விதத்தில் உள்ளதே தவிர பணத்தில் இல்லை.

பணத்தால் வாங்க முடியாத 10 விஷயங்கள்:

1.அன்பு

2.மரியாதை

3.பொறுமை

4.மகிழ்ச்சி

5.மன நிம்மதி

6.பகுத்தறிவு

7.ஒற்றுமை



8.மௌனம்

9.விசுவாசம்

10.புத்திசாலித்தனம்.

பில்கேட்ஸ் கம்பிப்யூட்டர் உலகின் ஜாம்பவான் உலகின் முதல் பணக்காரனாக இருந்தபோது ஒரு தடவை இந்தியா வந்திருந்தார்..

பில்கேட்ஸ்சை பார்த்து ஒருவர் கேட்டார்...

உங்களை விட பணக்காரர் வேறு யாராவது இருக்கிறாரா?

பில்கேட்ஸ்: ஆம் ஒருவர் இருக்கிறார்..

யார் அவர்?

பில்கேட்ஸ்: பல வருடங்களுக்கு முன் நான் வேலையில் இருந்து டிஸ்மிஸ் பண்ணப்பட்டேன்

நியூயோர்க் விமான நிலையம் சென்றேன்

நாளிதழ்களின் தலைப்புகளை

படித்துக்கொண்டு இருந்தேன்

நாளிதழ் ஒன்றை விரும்பி வாங்கலாம் என நினைத்தேன்

ஆனால் என்னிடம் சில்லறை நாணயம்



இல்லை எனவே அதை விடுத்தேன்.

அப்போது!.. ஒரு கறுப்பினச் சிறுவன் என்னை அழைத்து அந்த நாளிதழ் பிரதி ஒன்றை கொடுத்தான் என்னிடம் சில்லறை இல்லை என கூறினேன்.

அதற்கு அந்த சிறுவன்..

பரவாயில்லை இலவசமாக குடுக்கிறேன் என்றான்..

மூன்று மாதம் கழித்து நான் அங்கு சென்றேன். மறுபடியும் அதே கதைதான் நடந்தது... நாளிதளை இலவசமாக கொடுத்தான்.

ஆனால் நான் வாங்க மறுத்துவிட்டேன்.. அதற்கு அந்த சிறுவன் பரவாயில்லை வாங்குங்கள், இன்று எனக்கு கிடைத்த லாபத்தில் இருந்து தருகிறேன் என்று சொல்லி குடுத்தான்....

19வருடங்கள் கழிந்தன நான் பணக்காரன் ஆகிவிட்டேன்...

அந்த சிறுவனை மறுபடியும் காணும் ஆவல் எனக்கு மேலோங்கியது..

ஒன்றரை மாதம் தேடுதலுக்கு பின் அவனை கண்டுபிடித்துவிட்டேன்...

நான் கேட்டேன் என்னை தெரிகிறதா என்று?

ஆம் தெரிகிறது... நீங்கள் புகழ்வாய்ந்த பில்கேட்ஸ்..

பல வருடங்களுக்கு முன் இரண்டு முறை எனக்கு இலவசமாக நாளிதழ்களை வழங்கினாய்...

தற்போது நீ என்னவெல்லாம் விரும்புகிறாயோ அதை எல்லாம் உனக்கு கைமாறாக தர விரும்புகிறேன் என்றேன்..

உங்களால் அதற்கெல்லாம் ஈடுசெய்ய முடியாதே என அந்த கறுப்பு இன இளைஞன் கூறினான்.

ஏன் என்றேன்? நான்அதற்கு அந்த கறுப்பின இளைஞன்..

நான் ஏழையாக இருந்தபோது கொடுத்தேன் ஆனால் நீங்கள் பணக்காரன் ஆன பின்பே எனக்கு கொடுக்க வருகிறீர்கள்...

ஆகவே நீங்கள் எவ்வாறு அதை சரிக்கட்ட முடியும் என்றான்...

அன்றே உணர்ந்தேன் என்னை விட பணக்காரன் அந்த கறுப்பின இளைஞனே என்பதை..

கொடுப்பதற்கு நீ பணக்காரனாகவோ இல்லை பணக்காரன் ஆகும் வரை காத்திருக்க வேண்டும் என்பதோ கிடையாது..

உதவுவதற்கு ஏழையாகவோ பணக்காரனாகவோ நல்லநேரம் பார்த்தோ உதவவேண்டும் என்பது கிடையாது...

- **கவிஞர் சுகந்தீனா**









திருத்தணி தொகுதி அரக்கோணம் சாலையில் அமைந்துள்ள துரையார்பேட்டை CSI தொடக்கப்பள்ளியின்பழுதடைந்த தரையை சரிசெய்து தருமாறு பள்ளியின் தலைமையாசிரியர் திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக கழக பொறுப்பாளர் அண்ணன் திருத்தணி.திரு.எம்.பூபதி அவர்களை கேட்டுக்கொண்டதன் பேரில் அவரது சொந்த செலவில் பழுதடைந்த தரையை சரிசெய்து கொடுத்து அதனை பார்வையிட்டார் இதனால் அப்பள்ளியின் மாணவமாணவிகள் இருபால் ஆசிரியபெருமக்கள் பெற்றோர்கள் என அனைவரும் மகிழ்ச்சியுடன் கூடிய நன்றியை தெரிவித்தனர்.

– F.அருண்


# மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

ஆறாம் ஆண்டின் துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் இலட்சக்கணக்கான வாசகர்களோடு பயணிக்கிறது. இதழ்களில் இடம் பெறும் செய்திகள், கட்டுரைகள் பயனுள்ளதாகவும் தங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் இருப்பதாகவும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தாங்கள் அறியாத செய்திகள், புதிய தகவல்களையும் மித்ரா டைம்ஸ் எங்களுக்கு வழங்குகிறது என்பது வாசகர்களின் கருத்து.

மித்ரா டைம்ஸ் சந்தாதாரராக தாங்கள் இதுவரை ஆகவில்லையென்றால் உடனே செலுத்துங்கள்.

**ஆயுள்சந்தா : ரூ.2400.00**

**ஆறாண்டு சந்தா : ரூ.1440.00**

**ஆண்டு சந்தா : ரூ.240.00**

மேலும் விபரங்களுக்கு: **044-23743007/8**

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

Name : MITRA TIMES
A/C no : 50200012576292
Bank : HDFC Bank
Branch : T.Nagar
IFSC : HDFC0000206



# இதயத்தை நேசிப்போம்!

பாதுகாக்கப் பட்ட கூண்டுக்குள்,
பந்தயக் குதிரை போல்,
எப்போதும் இயங்கிக் கொண்டேயிருக்கும்!

அதன் இருப்பை,
மனிதன் எப்போதும்
உணர்வதே யில்லை!



துடிப்பில் துவளும் போது,
இவனும் துவண்டு,
ஏதேதோ செய்து,
இயக்க முயலுகிறான்!

தோல்வியுற்றவன் காணாமல் போக,
வெற்றி கண்டவன்,
அப்போதுதான் உணருகிறான்;
தன்னுள் இருந்து ஒன்று,
தன்னைப் பாதுகாப்பதும்,
துணையாய் பலவும் இயங்கிக் கொண்டே
இருத்தலையும்!

பசியால் அவன் நினைக்கும் இரைப்பைக்கு,
நாவின் உணர்வுக்கும்,
மனத்தின் பிடித்தலுக்கும்;
தேடித்தேடி தந்துவிட்டு,
ஒவ்வொன்றும்;
தன்நிலைப் பாட்டில் பிறழும் போது,
இதயம் தன் இருப்பை உணர்த்துகிறது!

நம் கோபம் ஆத்திரம்
அத்துனைக்கும் அதுவும் வடிகாலாகி,
தோய்ந்து போகிறது!



மனிதா இருக்கும் வரை;
இதயத்தையும் நேசி!
இருப்பவரையும் நேசி!
இயக்குகின்றவனையும் தேடு!
பிறப்பின் நோக்கம் அறிய முயல்!
வாழும் வரை போராட்டமே இராது!

**- கவிவளவன்**



# SPIRITUAL RATHNA AWARD 2021
# ஆன்மீக ரத்னா விருது 2021



**S.BASKAR Mudaliyar**
State President
SHEKKIZHAR KALVI PANPATTU KAZHAGAM

தொழிலதிபரும், சமூக சேவகருமான **திரு.ச.பாஸ்கர்** அவர்கள் ருத்ராபவுண்டேஷன் சார்பில்
ஆன்மீக ரத்னா விருது பெறுகிறார்.
மித்ரா குழும நிறுவனங்கள் மற்றும் மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துகிறோம்!

**எம்.எஸ்.மூர்த்தி** நிறுவனர்,
மித்ரா குழும நிறுவனங்கள் ஆசிரியர் மித்ரா டைம்ஸ் மாத இதழ்

MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/2019-2021
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP Licence No.(Inland) TN/PMG(CCR)/WPP/609/2019-2021
POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 November 2021



21/10/2021 ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை எழும்பூர் ரேடிசன் புளூ சிட்டி சென்டரில், தொழிலதிபர் திரு.அய்யப்பசுவாமி – திருமதி.ரம்யா இணையரின் செல்லமகள் I.பிரதியாவின் பூப்பெய்திய நன்னீராட்டு விழாவில் மித்ரா டைம்ஸ் ஆசிரியர் திரு.எம்.எஸ்.மூர்த்தி தமது குடும்பத்தினருடன் பங்குகொண்டு வாழ்த்தினார். உடன் தயாரிப்பாளர் திரு. இராம.நா.முரளி அவர்கள், சின்னத்திரை நட்சத்திரம் திரு. ஆடம் அவர்கள்.




KRM நிறுவனத்தில் பணிபுரியும் மேலாளர் திரு.அரிபாபுவின் மகள் யுவந்திகா ஸ்ரீ முதலாமாண்டு பிறந்தநாளில் பங்குகொண்ட மித்ரா டைம்ஸ் ஆசிரியர் திரு.எம்.எஸ்.மூர்த்தி தன் சார்பிலும், தனது குடும்பத்தார் சார்பிலும் வாழ்த்துகள் தெரிவித்தார்.

Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY